அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

மலர்: 7
இதழ் 2
விலை அ. 4

மன்மத ௵ வைகாசி ௴
மே—ஜுன்—1955

வருட
சந்தா
ரூ. 2-4-0



பணி தடைப்பட்டதே என்று தற்கொலைக்கு முயலும் தாயனாரை, 'விடேல்' எனும் ஒலியுடன் தடுத்து வீடளித்த தற்பரன்

(சித்திர விளக்கம் 14, பக்கம் 89)

பொருளடக்கம்

				பக்கம்
1.	'ராமா'—இது என்ன?	(ஸ்ரீ ராமானுபூதி)	...	49
2.	சுரதாஸர்	(கே. எஸ். நாகராஜன்)	...	52
3.	நடமாடும் நம்பன்	(சே த. ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.)	...	56
4.	சிவநேசர்	(ரசபதி)	...	60
5.	சிந்தனை சக்தி	(வி. ஆர். ஜி.)	...	70
6.	இருண்ட வீடு	(அ. ராமமூர்த்தி)	...	76
7.	பல்லாண்டு	(அன்பன்)	...	78
8.	பக்தியின் சக்தி	(ஆ. கி. ரங்கராஜன்)	...	80
9.	ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம்	(வி. எஸ். வெங்கடராமன்)	...	85
10.	அரிவாட்டாய நாயனர்	(கி. வா. ஜ.)	...	89
11.	Is Life a Dream?	(*Thiruppugal Mani*)	...	94

மன்மத ஆண்டு வாழ்த்து

மன்மத ஆண்டில் மக்கட்குச் சிறந்த அமைதியும் இன்பமும் செழிக்கவும், அன்பும் அருளும் அமையவும், வளமும் வாழ்வும் வளரவும், பெருமான் திருவருளை அமிர்தவசனி பிரார்த்திக்கின்றது.

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரை மீ° முதல் பங்குனி மீ° முடிய வருட சந்தா உள் நாட்டிற்கு இலங்கை உள்பட, ரூ. 2—4—0. நான்கு வருட சந்தா ரூ. 8—4—0. அயல் நாடுகளுக்கு வருட சந்தா 4 ஷில்லிங்குகள் நான்கு வருட சந்தா 15 ஷில்லிங்குகள் போஸ்டர் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னமேயே மன்மத ஆண்டிற்கு உரிய தங்கள் சந்தாத் தொகை 2—4—0ம் அனுப்பினல் தொடர்ந்து பத்திரிகை அனுப்பப் பெறும். வருஷத்தின் நடுவில் சந்தாச் செலுத்தினல், முன் பகுதிகள் கைவசம் இருப்பதை உத்தேசித்து, சந்தாதாரர்களாகச் சேர்க்கவோ மறுக்கவோ நேரும். ஆகையால், ஆண்டு பிறப்பதன் முன் சந்தா செலுத்துவதே நலம்.

அமிர்தவசனி, 54, பந்தர் தெரு, சென்னை.

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை.

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

மலர் 7	மன்மத ௵ வைகாசி ௴ மே—ஜூன் - 1955	இதழ் 2

'ராமா'—இது என்ன?

ஸ்ரீ ராமானுபூதி

ராமா என்பது இரண்டு எழுத்துக்களால் ஏற்பட்ட ஓர் மந்திரம். இந்த மந்திரத்தை ஜெபித்து வரும் மேன் மக்கள் அடையும் பலனைக் கம்பர் கூறுவார்.

"நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாபமும் சிதைந்து தேயுமே
ஜென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையில் ராமா என் றிரண்டெழுத்தினால்.

ராமா என்ற மந்த்ர ஜெபம் இகபர சௌபாக்யத்தைக் கொடுக்கின்றது போலும். பாப விமோசனமும் அதனால் அடைகின்றார்கள். துக்க விமோசனமும் ஏற்படுகின்றதென்றார். இவை ராமாயணத்தில் காணப்படுகின்றன. அகல்யா சாபம் தவிர்ந்தாள். சாபம் என்பது பாபத்தின் ப்ரதி பிம்பம்தானே. பாபம் ஒழிந்தால்

அருவமும் உருவம் ஆகி விளங்கும்
அருள் பிழம்பே எனை ஆட்கொள வருவாய்

சாபம் நிற்குமோ. பிம்பம் ஒழிந்தால் ப்ரதி பிம்பம் நில்லாதே. சபரி மோக்ஷத்தை அடைந்தாள். ஜென்மமும் மரணமும் தீரப்பெற்ருள். ராமநாம சக்தியால் சுக்ரீவன் ஆட்சி பெற்ருன். விபீஷணன் ஆட்சி பெற்ருன். மகாத்மா காந்தி அவர்களின் ராமத்தொனியால் இந்தியாவும் ஸ்வராஜ்யம் பெற்றது. ஸீதை சிறைவாசம் நீங்கவும் பெற்ருள்.

சக்தி எனும் ஜகன்மாதா சப்தஸ்வரூபமாய்ச் சராசரங்களாய்ப் பரந்து நிற்பதால், ராமநாம மந்த்ரம் சக்தியால் அடையக்கூடிய சர்வ பூரண பலனையும் கொடுக்கின்றது. இதைச் சித்தர்கள் விளக்கியிருக்கின்ருர்கள்.

'நானதேது நீயதேது நடுவில் நின்ற தேதடா, கோனதேது குருவதேது கூறிடும் குலாமரே, ஆனதேது அழிவதேது அப்புறத்துக் கப்புறம், ஈனதேது இழிவதேது ராம என்னும் நாமமே'. ராம மந்திரத்தின் மகிமையை வாலியின் முகமாகக் கம்பர் வெளிப்படுத்துகிருர்.

மும்மைசால் உலகுக்கெல்லாம் மூல மந்திரத்தை, முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்பெரும் பதத்தைத், தானே
இம்மையே எழுமை நோய்க்கு மருந்தினை, ராமவென்னும்
செம்மை சேர் நாமம் தன்னைக் கண்களில் தெரியக் கண்டான்.

ராமா என்ற நாமம் உள் வெளி இரண்டையும் சுத்தி செய்கிறது என்று வேதம் புகல்கின்றது.

சித்தர்கள் கூறுவார்கள்.

அந்திகாலை உச்சி மூன்றும் ஆடுகின்ற தீர்த்தமும்
சந்திதர்ப் பணங்களும் தபங்களும் ஜெபங்களும்

ஆணவ மலந்தனில் ஆழ்த்திடா துன்றன்
மாணடி ஏத்தும் மாண்பெனக் கருள்வாய்

சிந்தை மேவு ஞானமும் தினம் ஜெபிக்கும் மந்திரம்
சிந்தைராம ராம ராம ராம என்னும் நாமமே.

ராம நாமத்தைச் சிந்தையில் அன்பாய் வைப்போர்க்கு உள்ளும் புறமும் சுத்தி தருகின்றது.

ராம மந்திரம் தாரக மந்திரம். ஆதி ஆசார்யாள் சொல்வதும் அதுவே.

'யதாவர்ணயது கர்ண மூலேந்தகாலே
சிவோராம ராமேதி நாமேதி காச்யாம்
ததேகம் தாரகப் பிரம்மரூபம்
பஜேகம் பஜேகம் பஜேகம் பஜேகம்'

இந்த பாவத்தைத் தமிழ்ப் பாட்டுப் போதிக்கின்றது. நல்ல கதி பெற காசிக்குச் சென்று அங்கே தங்கும் பக்தர்களுக்கு விசாலாக்ஷி சமேத விச்வநாதர் ராம நாமத்தை உபதேசிக்கின்றாராம்.

'ஒளியதான காசி மீதில் வந்து தங்குவோர்க்கெலாம்
வெளியதான ஜோதிமேனி விச்வநாதன் ஆனவன்
தெளியு மங்கை யுடனிருந்து செப்புகின்ற தாரகம்
சிந்தை ராம ராம ராம ராம என்னும் நாமமே.'

சங்கர நாராயண ஐக்கிய தத்வமே ராமா என்ற நாமம் என்று த்யாக அய்யர் அவர்கள் பாடியது யாவரும் உணர்வார்கள். ஆகவே ராமாயணத்திற்கு முன்னமேயே, ராமநாம மந்த்ரம் இருந்த தென்பதையும், ராமாவதாரம் ராமநாம ப்ரபாவம் என்பதையும் உணரலாம்.

இடைவிடா துன்றன் இணையிலா அடிமலர்க்
கடைப்பிடித் தொழுகிடக் கடைக்கணித் தருள்வாய்

சூரதாஸர்

[கே. எஸ். நாகராஜன்]

டில்லி நகரில் அக்பர் பாஷா என்பவன் அரசாண்டு வந்தான். அவனிடம் சூரதாஸர் என்பவர் பெரிய பதவியில் இருந்து வந்தார். அவர் ஒரு சிறந்த பக்தர்; அடக்கமே உருவானவர்: தன்னலம் அற்றவர்; தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர். அவருடைய நற்குண நற்செய்கைகளை அறிந்த அக்பர் பாஷா அவர் மீது அளவிலா அன்பு பாராட்டலானார். நாளடைவில் அவருடைய பதவி உயர்ந்தது. மதுரை, கோகுலம், நந்தவனம் முதலிய நகரங்கள் கொண்ட பகுதிக்கு அவர் அதிகாரியாக நியமிக்கப் பட்டார்.

ஆண்டவன் சிறப்புற வந்து அவதரித்த காரணத்தாலும், பிறவி நோய் அறுக்கும் பெருமை உடையதாய் இருப்பதாலும், வட மதுரை தலங்களிற் தலை சிறந்தது. அவ்விடத்தில் வாழும் பேறு பெற்றதை நினைந்து மகிழ்ச்சியுற்றார் சூரதாஸர். கண்ணன் புரிந்த மாயலீலைகள் அவருடைய மனக்கண் முன் தோன்றின. மாறாத ஆனந்தத்தோடு, தூயதோர் இடத்தில் அதிகாரம் செலுத்தும் தாம் தூய்மையாக இருக்கவேண்டும் என்ற கடமை உணர்ச்சியும் மேலிட்டது.

நாட்டின் நல்வாழ்வு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு சூரதாஸர் அதிகாரம் செலுத்தி வந்தார். வறியவருக்கு வழங்குவதிலும் அடியார்க்கு அளிப்பதிலும் ஏராள

ஈட்டினை முன்னால் இடர்ப்படா துன்னை
நாட்ட வலியருள் நாதா விரைந்தே

மான செல்வத்தைச் செலவிட்டார். அடியார்க்குச் செய்யும் உதவியே ஆண்டவனுக்கு உகந்த வழிபாடு; அன்புசெய்யும் வாழ்க்கையே அவன் மகிழும் வாழ்க்கை என்பதை நன் குணர்ந்த சுரதாஸர், நாளடைவில் தன்னிடம் இருந்த பெரும் பொருளைச் செலவழித்து விட்டார். மேலும் தான தருமங்கள் செய்யப் பொருள் இல்லாமற் போகவே மனம் மிக நொந்தார். அரசனுக்குரிய செல்வம் அவரிடம் நிரம்ப இருந்தது. ஆனால் அரசிறையை எடுத்து உபயோகிக்க லாமா என்ற கேள்வி எழுந்தது. 'நமக்கு சொந்தச் செலவுக் காக அப்பொருளை உபயோகித்தால் தவறே. ஆனால் ஆண்டவன் அருட்பணிக்கு என் பணம் உன் பணம் என்ற வேற்றுமை எதற்கு?' என்று எண்ணி மனம் தெளிந்தார் தாஸர். அரசிறையினின்றும் ஏராளமாக எடுத்துச் செல விட்டார். மடங்கள் ஏற்படுத்தினர்; சத்திரங்கள் கட்டி னர்; அடியார்க்கு உணவும் உடையும் அளித்தார். அவ ருடைய நண்பர்கள் சிலர் அவர் மனத்தை மாற்ற முயன் றுர்கள். ஆனால் எவர் சொல்லையும் கேளாது சுரதாஸர் அடியார் திருப்பணிக்கே அனைத்தையும் அர்ப்பணித்து விட்டார். அவர் புகழ் நாடெங்கும் பரவலாயிற்று.

சுரதாஸருடைய பெருமையை அறிந்து புகழ்ந்தனர் பலர். மகிழ்ந்தனர் சிலர். பொறுமை கொண்டவர் ஒரு சிலர். பொறுமையுற்ற ஒருவன் அக்பர் பாக்ஷாவிடம் சென்று அரசுக்குரிய பணம் எல்லாம் கொள்ளை போகிறது என்று கோள் சொன்னன். அரசனும் வெகுண்டு வரிப்பணத்தை உடனே கொண்டு வருமாறு சில போர்வீரரை சுரதாஸ ரிடம் அனுப்பினன். அவரால் பணம் தர முடியாவிட் டால் அவரையே கைது செய்துகொண்டு வரும்படி கட்டளை யிட்டான்.

உன்னையல் லாதிங்(கு)உதவிவே றில்லை
என்னையாட் கொள்ள எம்பிரா னேவா

போர்வீரர் சுரதாஸரிடம் சென்று அரசன் கட்டளையைத் தெரிவித்தனர். தாஸர் அவர்களை வரவேற்று உபசரித்தார். 'அடியேன் அரசருக்குரிய பணத்தைச் செலவிடவில்லை. நிரம்பப் பொற்காசுகளை வைத்துக் காப்பாற்றுவது எனக்குத் தொல்லை. அவற்றை எடுத்துப் போவது உங்களுக்கும் சிரமம். ஆகவே அரசிறைக்கு அரிய நவரத்தினக் கற்களை வாங்கி வைத்திருக்கிறேன்' என்று கூறினர். பின்னர் தன் அறைக்குள் சென்று இருபெட்டிகள் நிறைய கற்களை அடுக்கினர். அவற்ருேடு ஒரு கடிதமும் எழுதி வைத்தார்.

'அரசே, தங்களுக்குரிய பொருளை நான் சொந்த முறையில் பயன்படுத்தவில்லை. உம்முடைய ஆதிக்கத்தின் கீழுள்ள மதுரை, பிருந்தாவனம் போன்ற தலங்களுக்கு வரும் அடியாருக்கு உதவி புரியும் பொருட்டே அப்பொருளைச் செலவிட்டேன். இதனுல் ஆண்டவன் அகமகிழ்வான். அவனளித்த செல்வம் அவன் அருட்பணிக்கே உரியதல்லவா? இதை உணர்ந்து நாம் செயல் ஆற்றுவோமானல், நமக்கு இம்மையிலும் மறுமையிலும் இன்பம் கைகூடும். இன்றேல் செல்வத்தின் சேவகனுய்ச் சீரழிந்து போவோம்' என்று அக்கடிதத்தில் கண்டிருந்தது.

போர்வீரர் தாம்பெற்ற பெட்டிகளை எடுத்துச்சென்று அக்பர் பாஷாவின் முன் வைத்தனர். உடனே அவன் பெட்டிகளைத் திறந்தான். சூரியன் தானே இது என்று பார்ப்பவர் வியக்குமாறு பேரொளி வீசும் நவரத்தினங்கள் குவிந்திருந்தன. அரசன் திகைப்புற்றுன். அக்கற்களில் ஒன்றுக்குத் தன் நாடு முழுமையும் ஈடாகாது என்று அரசன் உணர்ந்தான். சுரதாஸருடைய பெருமையை அறிந்தான். பெறற்கரிய பெருஞ் செல்வத்தைப் பெற்ற

ஊழ்வினை வசத்தால் உணவினுக்(கு)உழைக்கும்
பாழ்வினை மாற்றி நின் பணித்திறன் அருள்வாய்

தாக பேருவகை எய்தினன். பின்னர் பெட்டியி லிருந்த கடிதத்தைப் பார்த்தான். சுரதாஸர் எழுதி யிருந்த ஒவ்வொரு சொல்லும் அவன் மனத்தைத் தொட்டது. அவர் கூறியது முற்றும் உண்மையே என்று தெரிந்தது. தீயோர் சொற்கேட்டு அவர் மீது வீண் சந்தேகம் கொண்டதற்காக நினைந்து நினைந்து வருந்தினன்; மனம் புழுங்கினன்.

பின்னர் அக்பர் தன் வேலையாட்களை அனுப்பி சுரதாஸரை அழைத்து வருமாறு கட்டளையிட்டான். ஆனல் தாஸர் எளிதிற் கிடைக்கவில்லை. ஒரு காட்டில் தனித்திருந்து தவஞ் செய்துகொண் டிருந்தார். அவரைக் கண்டு ஏவலாட்கள் அரசன் விருப்பத்தைத் தெரிவித்தனர். அவரும் இசைந்து அரசவைக்குச் சென்ருர். அரசன் நிகழ்ந்தவற்றைச் சொல்லித் தன் குற்றத்திற்கு மன்னிப்பு வேண்டினன். தான் இட்ட வெறுங்கற்களை விலையுயர்ந்த மணிகளாக மாற்றிய மாயனைப் பலவாருகப் புகழ்ந்து போற்றினர் சுரதாஸர். முன்போலவே மதுரைப் பகுதிக்கு அதிகாரியாக இருக்கவேண்டும் என்றும், தம் இச்சைப்படி பணத்தைச் செலவிடலாம் என்றும், அரசிறை செலுத்த வேண்டியதில்லை என்றும், அடியார்க்கு அளித்து அதனல் அருட்செல்வம் தழைக்கச் செய்தால் போதும் என்றும் அக்பர் தாஸரிடம் மன்ருடிக் கேட்டுக் கொண்டான். முதலிற் சிறிது தயக்கமுற்ருர் எனினும், இறுதியில் தாஸர் அப்பொறுப்பை மீண்டும் ஏற்ருர். சுரதாஸர் எப்போதும் போலவே அடியாருக்கு அடியாராய் இருந்து நாட்டிற்கு நலன் விளைத்து வாழ்வாராயினர்.

எங்கணும் நின் புகழ் இயம்பியே வாழத்
தங்கவேல் கரத்தாய் தண்ணருள் புரிவாய்

நடமாடும் நம்பன்

(12-ஆம் பக்கத் தொடர்ச்சி)

(சே. த. ராமலிங்கம் பிள்ளை பி. ஏ., பி. டி.)

பிற குறிப்புக்கள்

(1) மேலே கூறிய கூத்துக்களி லெல்லாம், தில்லை முதலான ஏழு சபைகளில் கூடல் என்னும் மதுரை தவிர மற்றைய இடங்களில் நடப்பெருமான் இடது காலாகிய வாமச் சேவடி தூக்கிய நிலையும், ஊன்றிய வலக் காலின் கீழ் முயலகனும் இருக்கக் காண்கிறோம். திருப்பாச்சி லாச்சிராமத்தில் மட்டும் காலின் கீழ் முயலகனில்லை. அதற்குப் பதிலாகப் பாம்பு படத்துடன் காணப்படுகிறது. நமது ஆளுடைய பிள்ளையாராகிய திருஞான சம்பந்தப் பெருமான் இத் திருத்தலத்தில்தான் முயலகன் நோய் என்னும் குமர கண்ட வலியைப் பதிகம் பாடி மாற்றினர் என்பது வரலாறு. அந்த நோயாகிய முயலகனோடு நடராசரது திருவடிக் கீழிருந்த முயலகனும் நீங்கினன் போலும்.

2. மதுரையாகிய வெள்ளியம்பலத்தில் இராஜசேகர பாண்டியன் வேண்டியபடிச் சிவனர் இடக் காலுக்குப் பதிலாக வலக்கால் தூக்கிக் கான்மாறி ஆடிய வரலாறு முன்னரே வந்துள்ளது. இக்கூத்து 'சொக்கக் கூத்து' என்று நம்பி திருவிளையாடல் புராணம் கூறுகிறது. அதைப் போலவே கீழ்வேளூர் (திருவாரூருக்குக் கிழக்கில் உள்ளது) தலத்தில் அகத்திய முனிவர்க்குக் காட்சியருளிய கூத்தர், வலக்கால் தூக்கிய வண்ணமே காட்சி யளிக்கிறார்.

3. சிவனர் திருக்கூத்து நிகழ்தற்கேற்ற ஏழு சபைகளில் ஐந்து சபைகள் பிரசித்தமாதல் போலச், சிதம்பரத்

ஏகனே யென்றன் ஏக்கம் தவிர்த்துக்
காகா கந்தா கருணு கரனே

திலும் ஐந்து சபைகளுண்டு: 1. சிற்சபை அல்லது சிதம்பர ரகசியம். 2. கனகசபை—நடராஜப் பெருமானுக்குத் திரு மஞ்சனச் சாலை. 3. நிருத்தசபை—துவஜஸ்தம்பத்தின் தெற்கில் ஊர்த்துவ நடேசர் விளங்குமிடம். இது ஒரு தேரின் உருவாயுள்ளது. 4. தேவ சபை—உற்சவ மூர்த்திகளுள்ளதும் திருவாபரணங்கள் வைக்கப்பட்டுள்ளதுமான இடம். 5. இராசசபை—ஆனித் திருமஞ்சனம், மார்கழி அபிடேகம் நடைபெறும் ஆயிரக்கால் மண்டபம். தெய்வச் சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தை அரங்கேற்றிய இடமும் இதுவே.

4. திருநெல்வேலியிலும் ஐந்து சபைகளுண்டு என்று சொல்லப் படுகின்றது. அவைகள் கட்டாரி மங்கலம், கரி சூழ்ந்த மங்கலம், தாரகாபுரம் முதலியனவாம்.

5. புதுக்கோட்டை, திருவிராமேச்சுரம் முதலிய இடங்களில் நடேசரது திருவுரு வெவ்வேறு குறிப்புடன் விளங்குகிறது.

இவைபோன்ற வேறு குறிப்புக்களும் உண்டு. விரிஞ்சி விடப்பட்டன.

தொகுப்புரை

அசைவனவும் அசையாதனவுமானவற்றால் ஆகியது இவ்வுலகம். இரண்டு மூன்று பந்துகளை மேலெறிந்து ஒன்றும் கீழே விடாது பிடித்து வேடிக்கை காட்டுபவன், மேலும் கீழுமாக மாறி மாறி வரும் பந்துகளுக்கேற்பத் தன் கரங்களையும் உடலையும் வளைத்து அசைந்து கொடுப்பது போலே, அண்ட சராசரங்கள் அசைவு கொண்டு இயங்கவேண்டி ஆண்டவனும் தனக்கென சலனம் (அசைவு) இல்லையாயினும், ஆடவேண்டியவனுகின்

றான். இந்த நிலையிலுள்ள மூர்த்திதான் நடமாடும் நம்பனாகும். இம்மூர்த்தம் பரமசிவம் அருளினால் உருமேனி தரித்துக் கொண்ட இருபத்தைந்து திருமூர்த்தங்களில் ஒன்றாகும். இத்திருக்கூத்தருருவம் பதினாறு வகைத்து என்ப. கூத்தாடும் ஏனையோர் கூத்துப் போலாது ஆட்டுவானாகிய நட்டுவனின்றி, தன்னலங் கருதாது உலகுயிர்கள் பாசம் நீக்கவும் வீட்டின்பமாக்கவும் மாதொருபாக நோக்கி ஆதியு முடிவுமில்லாது நிகழ்த்தும் அற்புதத் தனிப் பெருங்கூத்து இதுவாமென அறிந்தோம். 'பரத குரு'வாக நம் கூத்தரசர் ஆடும் கூத்தினின்று அப்பரடிகள் முதல் எண்ணிறந்த நாயன்மார்களும் சைவத் தெய்வப் பாவலர்களும், சுவானுபூதிமான்களும், ஆழ்வாரும் அடைந்த அநுபவ உரைகளும் கேட்டோம். கூத்தாடும் தலங்களும் கூத்தின் வகைகளும் சங்க நூல் முதல் பிற்கால நூல்கள் வரையில் பலவேறு எடுத்துக் காட்டுகளுடன் கூறினோம்.

இத்துடன் பலவகைக் கூத்துக்கள் இயற்றவேண்டிய அவசியம் முதலியனவும் விவரமாக விளக்கப்பட்டன. இவைகள் அறிவிக்கும் மந்திர தத்துவ நுட்பங்களும், சமய சாத்திரங்கள் மூலமாக விரிவாய் ஆராய்ந்தோம். எனினும், எந்தத் தலத்தில் நடைபெறும் நடனம் எப்படிச் சிறந்த தாயினும் அத்தனைச் சிறப்பும் சிதம்பரத் தலத்தில் நடைபெறும் நடனத்தில் அடங்கியதே என்க. ஏனெனின், சிதம்பரம் என்பது (ஐந்து வகைப்படு) பஞ்ச பூத தலங்களில் ஆகாயத்தலம் ஆதலாலும், வேறு பூதங்கள் ஒன்றிலொன்று ஒடுங்கினும் அழியாதிருப்பது ஆகாயமே. ஒடுங்கிய பூதங்கள் பின் விரிவுறும்போது ஆகாயத்தினின்றே வெளிவரும். இதன்றி சிதம்பர நடராஜரிடத்தி லிருந்து செல்லும் கலைதான் உலகெங்கும்

ஒளியினும் ஒளியாய் ஒளிர்சிவச் சோதி
தெளிவெனக் கருள்வாய் தேவர்தம் கோவே

உலவிப் பின் அர்த்த ஜாமத்தில் அவரிடமே வந்து ஒடுங்கு மென்பர். இத்தலத்திற்கு வேறு சிறப்புக்களையும் பின் வரும் பாடல் ஒன்று கூறுகிறது.

"துன்மதன் பாவம் தொலைத்து அருளளிக்குமூர்
துச்சகன் கதியடையுமூர்
சோறுமறையோர் வாயில் ஓதனம் சிந்துகொடி
சுவர்க்க வீடினை எய்துமூர்
பொன்மயமதாய்க் கவுடதேயன் உடலாகும் ஊர்
புலிபாம்பு தவமுயலும் ஊர்
புலையர் மூவர்கள் முத்தி பெற்றவூர் ஈரைந்து
புண்ணிய தீர்த்தம் சேரும் ஊர்
சென்மநோய் தீர்க்குமூர் முதுமைபோய் இளமையது
திருநீல கண்டர் பெறும் ஊர்
தில்லை மூவாயிரவரில் அரன்ஒருவர் என்னுமூர்
தெரிசிக்க முத்தி தருமூர்
நன்மைதரு பாற்கடல் அரும்புலிக் குட்டிக்கு
நல்குமூர் வல்ல புலியூர்
நடராசன் அன்பினுடன் என்னாளும் தவமுது
நடமாடி வாழு மூரே."

மேலும் சிதம்பரம் இதயாம்பரப் பெருவெளியான மணி பூரகத் தானமாய் விராட் புருடனுக்கு அமைந்த தலம். இங்கு ஆடும் கூத்துத்தான் ஐந்து மெய்ப்பாடுகளால் ஐந்து எழுத்தருணிலையையும் ஐந்தொழில் அடைவினையும் அறி விப்பது. இந்தக் கூத்தினையே ஆனந்தக் கூத்து என்றும், அனவரத தாண்டவம் எனவும் விதந்தோதுவர். மற்றைய கூத்துக்கள் இங்கு நடைபெறும் கூத்தின் ஒரு சில அங்க மானவற்றையே பெருக்கிக் காட்டுவன. இக்கூத்து ஒன்றே கல்லான மனத்தையும் கட்டுவிட்டு உருக்கும் இயல்பினது.

ஓமொலிப் பொருள்தனை ஓதிய பரனே
மாமயில் வாகா வந்தருள் புரிவாய்

அக்கூத்து அகத்தும் புறத்தும் நிகழ்வதாகும் அற்புத முடையது. அதனை அவ்வாறே கண்டறிந்து களிகூரும் சிறப்பு அடைந்துவிட்டால் 'மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே' என்ற திருவாக்கின் திறம் அமைந்துவிடும். அங்ஙனம் கண்டு அன்பு கொண்டு இன்புற்றவர்கள் பரம்பரை, வாழையடி வாழையாக இன்றும் வாழ்ந்துகொண்டுதா னிருக்கிறது. அவ்வழி வந்து 'நடங்கண்டு காதலித்த நங்கை' வரலாற்றை அடுத்த இதழில் படித்து அகமகிழுங்கள்.

சிவனடியார் 2

சிவநேசர்

(ரசபதி)

தலநலம்

தொண்டர்கள் நிறைந்தது தொண்டை நாடு. அந் நாட்டில் திருமகளின் நடன கோயிலாகத் திகழ்கின்றது திருமயிலை. தேவியுடன் பக்தர் பலர் வழிபட்ட பரம அத்தலம், இன்றும் கம்பீரமாக இருக்கின்றது.

தெய்வீகமான குட்டை ஏழு; குளம் ஏழு; அற்புதக் கிணறு ஏழு அப்பதியில் அமைந்தவை. அவ்வளவுதானு?

ஏழு கணபதி கோயில், ஏழு குமர கோட்டம், ஏழு திருமால் சினகரம், ஏழு தேவி ஆலயம், ஏழு ஈச்சுரம் மயிலையில் இருந்தவை. ஆய்வாளர்க்குப் பயனுக, அவை களுள் இன்றும் பல அப்பதியில் இருக்கின்றன.

ஔவியம் பேசா அறநெறி நின்று
செவ்வனே வாழத் திறனருள் புரிவாய்

கலைவளம்

நன்னூற் காண்டிகை உரையாசிரியர் மயிலைநாதர்; அவரும் இப்பதியில் இருந்தவர். பேசும் நீதிப் பெரியர் திருவள்ளுவர் பிறந்த தலம் இது. மொழி விளக்கேற்றி முகுந்தனைத் தொழுத மூவருள் ஒருவரான பொய்கையார் அவதரித்த புனித இடம். சிவயோகம் கைவந்த தத்துவ ராயர் கைவல்யங் கண்டது இத்தலத்தில்தான். இன்னபல தெய்வ நலத்தது திருமயிலை.

சிவ புண்ணியம்

வாழப் பிறந்தவர் இங்கிருக்கும் வைசியர்கள்; அவர்களுள் ஒருவர் இரத்தின வர்த்தகர். அவர் பெருஞ் செல்வாக்குப் பெற்றவர். காலந் தவறாது கபாலீசரை வழிபடும் இவர், சிவனடியாரைச் சிவமாக நினைத்தார். வாழும் உணர்வுடன் அவர்களை வழிபட்டார். சிவ நாமம் கூறி, அவர்கட்கு வாரிப் பொருளை வழங்கினர். இது, சிறந்த அவர் என்றும் செய்யும் செயல்.

எதற்கும் ஒரு அளவு வேண்டும். மீறினல், இயற்கையே சீறும் என்று குறு குறுத்தது குடும்பம். ஆம் ஆம் என்று சார்ந்து பேசியது சமூகம். செல்வர் அதைக் கேட்டுச் சிரித்தார்.

இரக்கம் மிக்க உங்கட்கு என் வணக்கம். என் சிற்றுரைக்குச் சிறிது செவி கொடுக்க வேண்டும். அதன் பிறகு நீங்கள் என்ன சொன்னலும், அதன்படியே நடக்கிறேன். தயவுசெய்து கேளுங்கள்.

கடவுட் காட்சி

எங்கும் வியாபகம் தெய்வம். கண்ணிருந்தும் அதைக் காண்பவர் இல்லை. காரணம் என்ன? ஆன்மாவில் இருக்கின்றது அழுக்கு; அது, கருமலம் என்னும் பெயர் பெறும். உடையில் சேர்ந்த அழுக்கைப் போக்க உழமண் சேர்க்கும் அதுபோல, மலம் கழுவ வந்தது மாயை; அதுவும் ஒரு

அழுக்குத்தான். அதனுடன் கனத்திருக்கிறது கன்ம மலம். முக்கூட்டுச் சிக்கருது என்பர். அந்த மூன்றூும் தடிப்பு அதிகரித்தது. அதனல், தன்னையும் அறியவில்லை; ஆன்மாவிற்குத் தலைவனும் புலனுகவில்லை.

தான் அல்லாததை நான் என்ருய்; உன் உடைமை என்பது ஒன்றும் இல்லை ; எனினும் எதை எதையோ என் பொருளென்று இறுக்கி வைக்கிருய்; சூழ்ச்சி பல செய்கின்ருய். இதனல் ஆகாமியம் அதிகரித்தலை அறிந்திலை; வாழ்ந்த வாழ்வு வீழ்ந்து விடும். மரணத்தின் பின் இவைகள் அரணம் ஆகா; இவைகளை, அன்று எண்ணி வருந்தி ஆவதென்? மதியைக் குழப்பி மயங்காதே!

உய்ய வேண்டுமேல், நான் எனது என்னும் அவைகளை, இடு இதனில் என்று கபாலம் காட்டுகின்ருர் கபாலியார். இப்படியே பிட்சை கேட்கின்ருர் அந்தப் பிரபு. ஈதல் அறம் என்பது, திருவருட் குறிப்பு. அப்பெருமான் திருவுளத்தை அறிந்து, உள்கி உள்கி உள்ளன எல்லாம் உவந்தளிப்பவர்தம் பிறவி வெம்மை ஒழிய, கற்பகமாகி நிழல் தருகின்ருர் கற்பகாம்பிகை. அந்நிழலில் நின்றவர்க்கே விமல சிவம் விளங்கும். சேவிக்கும் பேற்றில் சிவநேயம் விளையும் என்று அருள் நூல்கள் இவைகளை இனிது அறிவிக்கின்றன.

அடியவருள் இறைவன் நிறைவுபெற அமர்ந்துளன். அவர்களுக்கு அளிப்பது அமலனுக்கு அர்ப்பணிப்பது. அரிய இவைகளை நீங்களும் அறிந்திருக்கிறீர்கள். கற்றதும் கேட்டதும் அநுஷ்டானத்தில் இல்லையெனில், வித்தக முயற்சி யெல்லாம் விழலுக்கு இறைத்த நீர்தான்.

பேசுகின்ருர் சிவநேசர்; இங்ஙனம் பேசிக் கொண்டேயிருக்கிருர்; பெருகுகின்றது கண்ணீர்.

உறவினர் அவர் மனநிலையை உணர்ந்தனர்; ஊராரும் அறிந்தனர். பல நாளும் இப்படியே பயனுள சொற்பொழிவு. கேட்பவர் உள்ளம் கிளு கிளுத்தது.

கடன்பளு வால்மனம் கலங்கிடா திருக்கக்
கடம்பனே சித்தம் கரைந்தெனைக் காப்பாய்

வாக்காலும், மனத்தாலும், காயத்தாலும் சிறந்த இவரே சிவ நேசர் என்று சிறப்பித்தது உலகம்.

வர்த்தக நடை

அந்நாளில் தொண்டை நாட்டை ஆண்டவர் ஒரு மன்னர். அவர், மகாராணிக்கு ஒரு மதாணி செய்ய எண்ணினர். அதற்கான கிளரொளி நவமணிகள், சிவநேசரிடம் கிடைத்தன. மாபெரும் ஒளியுடையது ஒரு மாணிக்கம். இருந்தவற்றுள் அதுதான் பெரியது. நலம் சிறந்த இது, நாயகத்திற்கு உதவும் என்று தெளிந்து தேர்ந்தனர். கூடுதல் குறைதல் இல்லாமல் விலே பேசி முழுப் பணமும் கொடுத்தனர். மங்கல நாளில் கொண்டு போகிறோம்; இங்கேயே இவைகள் இருக்கட்டும் என்று, சிவநேசரிடமே மணிகளே வைத்துச் சென்றனர் வந்தவர்.

அடியர் நடை

மூல தலம் திருவாரூர். அங்கு தியாகரை ஆராதிப்பவர் பலர்; அப்பெருமானிடம் தம் உள்ளத்தையே அர்ப்பணித்தவர் இருவர். மாபெரும் தியாகர்க்கு ஒரு மணிமாலே சாத்த, பல காலமாக அவர்களுடைய புண்ணியம் நண்ணிய புனித மனம் எண்ணி இருந்தது. அதற்கென்றே சிறுகச் சிறுக பொன்னும் மணியும் பொலியத் திரட்டினர். நாயக மணி வேண்டும். அதற்காகப் பல இடங்களில், மும்முரமாக வருந்தி முயன்றனர். ஆரூர் நாயகர் அருளால், ஒரு மணி அகப்பட்டது. இணையாக வேறொரு மணி வேண்டும். எங்கும் தேடினர். வினே த்தது நிறைவேறவில்லே. உடைந்தது உள்ளம். இரவும் பகலும் ஏங்கினர். ஏக்கம் வலுத்தது. அது குறித்து ஒரு நாள் கண்ணுதல் திருமுன் கதறினர்.

திருப்பணி செய்ய இயலவில்லேயே என்று தேம்புகின்ருர் இவ்வடியார். தம் வாழ்வு வளர, வஞ்சகம் பலசெய்து

கார்த்திகை மாதர் கண்மணி யேயென்
வார்த்தை யில்இரு, மெய் வாழ்வளி வரதா!

நல்லோரை வருத்துகின்றார் பிறர். என்ன அதிசயம்! இவ்வுலகில் எத்துணை வேற்றுமை?

வீடு திரும்பிய அமலன் அடியவர், அயர்ந்து படுத்தனர். தம்மையும் மறந்து சிறிது கண்ணயர்ந்தனர். நல்ல கனவு.

எதிர்நின்றார் ஒருவர். திருநீறு சண்ணித்த மேனியர். கனிவிக்கும் அவர் திருவுருவைக் கண்டதும், வாழ்விற்கு உரிய பக்தர்கள் கைகுவித்து வணங்கினர்.

அரிய உங்கள் நினைவை அறிவோம். வீணை கவலை வேண்டா. தொண்டை நாட்டில் உளது திருவொற்றியூர். தருமம் தளிர்த்தவர்; விபூதி மலர்ந்தவர்; தவம் காய்த்தவர்; சிவம் பழுத்தவர் எனப் பரிபாகிகள் பலர் அப்பதியில் உளர். அங்கிருக்கும் படம்பக்க நாதரை ஆராதிப்பது நலம். நிமல உமது எண்ணம் அங்கு நிறைவேறும்.........

கனவு அகன்றது. கண் விழித்தனர். உடனே எழுந்தனர். எதிர் எதிர் வீட்டிலிருந்த அந்த அடியவர் இருவரும், ஒன்று கலந்தனர். புனித மகிழ்வுடன் அப்போதே புறப்பட்டனர். நாள் பல நடந்தனர். ஒற்றியூர் என்னும் ஆதிபுரியை அடைந்தனர். நீராடினர்; நீறு அணிந்தனர்.

படம்பக்க நாதரைப் பணிந்தனர். பலநாள் வழிபட்டு, இன்ப அன்பு வழியில் இருந்தனர். நாயகமணி இருக்கும் இடம் அறிய, இன்னும் எத்தனை நாளாகுமோ என்று வர வரக் கவலை வளர்ந்தது. கசிந்து பெருகியது கண்ணீர்.

பிரார்த்தனைப் பேறு

கனவில் திருமேனி காட்டிய கருணையாளா! நாயகம் இருக்கும் இடம் காட்டு நம்பா என்று, ஒருநாள் பொருமி அழுது போற்றினர்.

யார் ஐயா அது, கோயிலில் வந்து குமுறுவது ?

அதட்டிய குரல் கேட்டுத் திடுக்கிட்டு இருவரும் திரும்பினர். கம்பீரமான தோற்றம்! இடுப்பில் கைகள் இரண்டையும் வைத்து இறுமாந்து நிற்கின்றார் ஒருவர்.

கிண்கிணி குலுங்கக் கிரிதலந் தோறும்
நன்கு நடம்செயும் நாயகா சரணம்

ஆரூர் நாயகர்க்கு ஆரம் ஒன்று அமைத்தோம்; நாயக மணியின்றி நைகின்றது மனம். பலநாள் முயன்று பயன் விளையாமையால், படம் பக்கநாதா! நீயே வழிசெய்ய வேண்டும் என்று வந்தோம். முறையிடுகின்றோம்; அவ்வளவுதான் ஐயா!' என்று பக்தர்கள் மீட்டும் அலறி விம்மி அழுதனர்.

அட! இதற்காகவா ஐயா இப்படிக் கதறுகிறீர்கள்? சே சே! நாயகம்தானே தேவை; நான் வாங்கித் தருகிறேன். என்னோடு வாருங்கள் என்று இரைந்தார். கனத்த அவர் குரலால், எங்கும் எதிரொலி எழுந்தது.

குணம் சிறந்த அடியவர் உள்ளம் குளிர்ந்தது. நாத் தழுதழுத்தது. ஐயா! உங்கட்குப் புண்ணியம்; நாயகம் எங்குக் கிடைக்கும் என்று கேட்டு இனிது வணங்கினர்.

என்னைப் பின்பற்றி வாருங்கள்; அவ்வளவுதான் என்று, போய்க் கொண்டே இருக்கின்றார் அந்தப் புனிதர். நம்பன் அடியவர் இருவரும் அவரைத் தொடர்ந்து நடந்தனர்.

வீரப்புரை

வழிநடை மாள, என் வரலாற்றைக் கேட்டபடியே வாருங்கள்! என் பெயர் பிரபு. எனக்கு அடியவர்களிடத்தில் ஆர்வம் அதிகம். தூய அவர்கட்கு உதவுவது என் தொழில். சிவனடியார்க்கு உதவுக என்று சிறந்தாரைத் தூண்டுவேன். உதவினர்க்கு மறைமுகமாகி உதவுவேன். மனசாட்சியை மறுத்தார்க்கு, வேறு பல வகையில் நஷ்டம் விளைவிப்பேன். என் செயலை அறிந்தார் சிலர்; அறியாதவரே பலர். என்னை ஏய்க்க, உலகில் எண்ணுவாரும் உளர்.

இங்ஙனம் பேசியபடியே, அடியருடன் பிரபு திருமயிலையை அடைந்தார். சிவநேசர் திருமாளிகையுள், அடியவர்களை முன் அனுப்பினர்; சிறிது நேரம் பொறுத்துத் தான் பின் நுழைந்தார். புன்னகை அவர் திருமுகத்தில் பொலிகிறது.

கீரனுக் கருளிய கீர்த்திப்ர தாபா
வீரவேல் பாணிநீ விரைந்தருள் புரிவாய்

செய்த செயல்

சிவனடியாரைக் கண்டதும், சிவநேசர் இன்பம் மிகுந்து எழுந்தார். விநயத்துடன் வீழ்ந்து வணங்கினர். பயனுள உபசாரம் பலசெய்தார். பின்வந்த பிரபுவையும் பார்த்தார்.

ஐயா! தாங்கள் யார்? என்னால் ஏதேனும் ஆகவேண்டுமா? பக்தர்கள் வந்துளர்; சீக்கிரம் சொல்லுங்கள்!

அடாடா! சொல்வதற்குள் அவசரமா? என் பெயர் பிரபு. எனக்கு ஒன்றும் உம்மால் ஆகவேண்டுவது இல்லை. திருவாரூர்த் தியாகர்க்கு இரத்தினமாலை ஒன்று சித்தமாகிறது. நாயக மணிதான் தேவை. அதை விரும்பும் அன்பர்களான இவர்களை அழைத்து வந்தேன் நான்.

அப்படியா! என்னிடம் எவ்வளவோ இரத்தினங்கள் இருக்கின்றன. நாயகம் தற்போது கைவசத்தில் இல்லை. அரிய ஒன்று இருந்தது; அதை அரசர் வாங்கிக் கொண்டார். அதைக் கொண்டு போக அரச தூதர்கள் இரண்டொரு நாளில் வருவர். ஆஹா! சுவாமிக்கு இல்லை என்று சொல்ல நேர்கிறதே!

வீண் பேச்சு வேண்டாம். அடியார்களை உம்மிடம் அழைத்து வந்தேன். ராஜா பெரியவரா, தியாக ராஜா பெரியவரா? நீரே எண்ணிப் பாரும்! அவ்வளவுதான் என்றார் பிரபு.

அதை யானும் அறிகிறேன்; அளித்ததை மறுத்தேன் என்று சீறுவரே அரசர்! என்ன செய்வது? ஒன்றும் தோன்றவில்லையே!

அதுவும் சரி. ஒரே ஒரு வார்த்தை! காணுமாறு அந்த நாயகத்தை எங்கட்குக் காட்ட முடியுமா?

அதற்கென்ன! தாராளமாகப் பார்க்கலாம் என்று பெட்டியைத் திறந்தார். கனமான நாயகத்தைக் காட்டினர். பள பள என்று அந்த இடம் முழுவதும் பரவியது ஒளி. கண்டவர் கண்கள் கூசின. பரந்தமனம் படபடத்தது.

ஆஹா! அருமையான நாயகம். இவ்வளவு பெரிய மாணிக்கம் எங்குமே கிடைக்காது; இது உண்மை என்றார் பிரபு. அடியார்க்கோ அந்த நாயகத்தில் ஆவல் வளர்ந்தது.

குறமகள் கேள்வா குருமலை வாழ்வே
அறஞ்செயும் ஆற்றல் அன்புடன் அருள்வாய்

துடிதுடிப்புடன், எவ்வளவு இதன் விலை என்றார் பிரபு.

நினைவில்லை. ஏட்டைப் பார்த்துச் சொல்கிறேன்; இதோ வருகிறேன் என்று, கணக்குப் புத்தகத்தைப் பார்க்க உள்சென்று, சிறிது நேரத்தில் திரும்பினார் சிவநேசர்.

இருந்த இடத்தில் பிரபுவும் இல்லை; அடியவரும் இல்லை. என்ன வியப்பு!

'வர்த்தகர் அல்லவா! கண்யமாக ஏதோ போக்குக் காட்டுகிறார். நாயகத்துடன் நீங்கள் நடவுங்கள்! சிறிது விலை கூட்டிச் சொல்வார்; அவ்வளவுதான்! குறிக்கும் பணத்தை நானே கொடுத்து விடுகிறேன்' என்று, அடியவரைப் பிரபு வழிகூட்டி அனுப்பி விட்டார். அதை நம்பி, ஆரூர் நோக்கி விரைகின்றார் அடியவர். இச் செய்தியை எப்படி அறிவார் சிவநேசர்?

என்ன அதிசயம்! வீதியில் வந்து பார்த்தார். வடதிசை நோக்கிப் பிரபு ஓடுவதை உணர்ந்தார். பிரபுவைப் பிடியுங்கள்! என்று ஏவலாட்களை ஏவி யிருக்கலாம். அந்த எண்ணமே மனத்தில் அரும்ப வில்லையே!

என்ன தைரியம்? வள்ளல் உருவில் கள்ளன்! விடப் படாது இவனை என்று சினந்து துரத்தினர் சிவநேசர்.

அவர் ஓட, இவர் துரத்த, கடற்கரை வழியாகவே இருவரும் நெடுந்தூரம் வந்துவிட்டனர். திருவொற்றியூர் எல்லையைச் சேர்ந்ததும், திடீரென்று கனத்த அலைகளை எழுப்பியது கடல். இருவர்க்கும் நடுவில் உபநதிபோல் வெள்ளம் பெருகி ஓடியது. அப்பால் பிரபு; இப்பால் சிவநேசர்.

வேதனை விளைவு

ஹஹ் ஹா ஹா ஹா! என்று பெரு நகை செய்கிறார் பிரபு.

துடித்தது உடல்; பதைத்தது மனம்; ஆத்திரம் சிவநேசர்க்கு அதிகரித்தது.

கூர்வடி வேலா குஞ்சரி கொழுநா
சூர்தனைத் தடிந்த சுப்பிர மணியா

கள்ளனுக்கு உதவுகின்றது கடல். அக்கிரமத்திற்கு உதவுகின்றது உலகமெனில், வாழ்வே வேண்டா; இந்நதியே என்னை விழுங்கட்டும் என்று துணிந்தது மனம். ஆ! ஆ!!

என்ன அற்புதம்! எதிரில் ஓரே ஜோதி வெள்ளம். பெருகிய ஒளி நடுவில் பிரபு, மான் காட்டி, மழு காட்டி, சடை காட்டி, கங்கை காட்டி, பிறை காட்டி, அபய வரத கரங்காட்டித் தியாக ராஜராய்த் தரிசனமாயினர்.

மகத்தான இக் காட்சி கண்டு திடுக்கிட்டது மனம். உடல் சிலிர்த்தது. நலஞ்சிறந்த கைகால்கள் நடுங்கின.

ஐயோ! எவ்வளவு பெரிய அபசாரம் செய்தேன்! ஓலமிட்டும் வேதம் காணு அத்தா! உம்மை ஓட ஓடத் துரத்தினேன் துரோகி! மாபெரும் பாவியான என்னை மன்னிப்பாயோ மாதேவா! நாயகம் கேட்ட அருள் நாயகமே! மன்னன் சிறுவன் என்று மறுத்தேனே! மறுத்தேனே என்று நாக்குழறி உரைத்து, மோதி மோதி முகத்தில் அறைந்து கொண்டார். சித்தம் சிதைந்து கதறுகிருர் சிவநேசர்.

அன்பனே! நம் ஆடல் பல; அவைகளில் இதுவும் ஒன்று. அரிய உன் திருவுளத்தை அறிவேம்; அதனுல் தான் அடியவர்க்கு உன் மூலம் உதவினேம்!

எம்பெருமா! பிழைபொறுத்து இந்த ஏழைக்கு என்றும் சேவை அருள்! இன்றேல், வாழ உனதடியில் வை!

உன்பொருட்டுத் திருவொற்றியூரில் என்றும் மாணிக்க தியாகராகி இருப்பேம். பலகாலம் பணி செய்து இரு! காலம் வரும்; அன்று உன்னை ஏற்பேம் என்று அருளி, திருவுருக்கரந்தது தெய்வம். சிவநேசர்க்கு, இன்பம் மிகுந்து கலுழ்ந்தது கண்ணீர்.

ஆரவாரித்த கடலின் ஒலி அடங்கியது. நதியானநீர், திருவொற்றியூர் ஸ்ரீ அப்பர் ஸ்வாமிகள் கோயிலின்முன் குளமாகி, இப் பழைய வரலாற்றை இன்றும் நினைப்பூட்டிக் கொண்டு இருக்கின்றது.

கெடுமதி யால் பல கேடிழைப் போரை
நடுநிலை உணர அருள்நீ நம்பா!

சிவநேசர் விரைந்தார். திருக்கோயிலுள் புகுந்தார். மாணிக்கத் தியாகரைச் சேவித்தார். படம்பக்க நாதரைப் பணிந்தார். அமலன் அருளாடலை எண்ணி அகமுருகி அழுதார்; தொழுதார். திருமயிலை நோக்கித் திரும்பினர்.

ஆக்கினை

மாளிகை வாயிலில் மன்னவர் தூதர். அவர்களைப் பொருட்படுத்தாமல், காட்சியான தற்பரன் வடிவை எண்ணியபடியே தம் மாளிகையுள் நுழைந்தார். பூஜையறையில் புகுந்தார். அங்கு இறைவன் திருவருளை எண்ணி யிருந்தார்.

பார்த்திபர் ஆட்களுக்கு, இது அவமரியாதையாகப் பட்டது. உள் நுழைந்தனர். என்ன ஐயா! கொடுத்த நவமணியைக் கொடும் என்று கூறினர். அப்படியே என்று சிவநேசர் அளித்தார். ஆய்ந்து எண்ணிய அவர்கள், எங்கே நாயகம் என்றனர். அதைத் திருவாரூர்த் தியாகர் கொண்டு போனுர்; பேசிப் பயனில்லை என்ருர் சிவநேசர்.

ஏமாற்று வார்த்தை இது! அரசத் துரோகம்; இதற்குத் தண்டனை என்ன தெரியுமா?

உங்கள் விருப்பப்படியே செய்யலாம் என்ற அவரை, விலங்கிட்டு அழைத்துச் சென்று, சிறையில் அடைத்தனர் அரசர் ஆட்கள். எங்கிருந்தாலும் என்ன? இறைவனை எண்ணி இன்புற்றிருக்கின்ருர் அன்பர்.

இன்ப அருள்

அன்று இரவு மன்னர் கனவில் மாணிக்கத் தியாகர். என் அன்பன் சிவநேசன். நாயக மணியை நாம் கொண்டோம். விலங்கவிழ்த்து விடுதலை செய்! அன்பன் உள்ளம் அலமந்தால், வாழும் வாழ்வு வீழ்ந்துவிடும். அவ்வளவுதான்.

திடுக்கிட்டெழுந்தார் வேந்தர். உடனே உரியவர்களை வருவித்தார். வரலாற்றை வினவி யறிந்து வருந்தினர். சிறைக் கோட்டத்தை யடைந்தார்; விலங்கவிழ்த்துச் சிவநேசரை வீழ்ந்து வணங்கினர்.

கேசவன் மருகா கேண்மை வளர்ந்துன்
வாசம் முகக்கும் வாழ்வளிப் பாயோ

கனவில் உம் அருமை அறிந்திலன். அமலன் கனவில் அறிவிக்க, அன்பர் நீர் என்று அறிந்தேன். நடப்பை யறியேன்; மன்னிக்க வேண்டும்' என்று வேண்டினர். பய பக்தியுடன் அவரைப் பல்லக்கில் ஏற்றினர். அவர் மாளிகை வரை தானும் உடன் சென்றார்.

கனவில் விமலனைக் கண்ட காவலா! நவமணிகள் ஏராளமாக இருக்கின்றன. வேண்டியன கொண்டு செல்லும் என்று, திருமுன் இருந்த பெட்டகத்தைத் திறந்தார்.

என்ன வியப்பு! இருந்தனவற்றுள் பல, நாயக மணிக ளாகி நல்லொளி பரப்பின. அரசர் வியந்தார். சிவனருள் இது என்று சிரித்தார் சிவநேசர்.

மன்னர் ஒரு நாயகமணி கொண்டு மகிழ்ந்தார். திரு வாரூர்த் தியாகர்க்கு, மணிமாலை சாத்திச் சிவனடியார் மனங்களித்தனர். அரசரும் சிவநேசரும் ஆரூர் சென்று, எம்மானைப் பணிந்து இன்புற்றுத் திரும்பினர்.

காலையில் கபாலீசர்; மாலையில் மாணிக்கத் தியாகர். இப்படி இருதலத்திலும் பலகாலம் இறைவனைச் சேவித்து இருந்து, சிவானந்தம் எய்தினர் சிவநேசர்.

அமலன் அடியார்
அருளார் திருவடிகட்கே அடைக்கலம்!

சிந்தனை சக்தி.

வி. ஆர். ஜி.

மனமே! நீ அனுதினமும் என் சிந்தனை சக்தியை இவ் வுடலை போஷித்து வளர்ப்பதற்காகச் செலவு செய்து உழைக்கிறாய்! இதுவேண்டியதவசியமே. இதைப் பற்றி நான் ஒன்றும் குறைகூறவில்லை. இதைத் தவிர உனக்கு சந்தோஷமும், திருப்தியும், பெருமையும் ஏற்படுவதற்காக,

---

கைதவம் மிகாமல் கண்டகர் தமையும்
செய்தவம் மிகவே செய்யெம் பெருமா

அளவின்றி இரவு பகலாய் உன் சிந்தனை சக்தியை ஒரு பிரயோஜனமுமற்ற பற்பல விஷயங்களில் செலுத்தி, அதைக் களிப்படையச் செய்து நீ சிறிது நேரம் மகிழ்கிருய்! அதன் பின் அது போன இடம் தெரியவில்லை. பழைய நிம்மதியற்ற தன்மைக்கே வந்து உழல்கிருய்! இது கொஞ்சமேனும் ஞாயமில்லை. புத்திசாலித்தனமுமில்லை. இதனுல் நீ ஓர் நிலையான பலனையும் அடையப் போவதில்லை.

ஆண்டவன் நமக்கு உவந்தளித்துள்ள சிந்தனை சக்தியானது, தற்சமயம் உலகினரால் மிக சக்தி வாய்ந்ததாகக் கருதப்படும் "அணுசக்தி"யைவிட வலிமை வாய்ந்தது என்பது உனக்குத் தெரியாதா? அதை நாம் சரியான வழியில் செலவிட்டால் நாம் அடையக்கூடாத பதவியும் பொருளும் உண்டா? யோசித்துப் பார்.

நான் சொல்வதைக் கொஞ்சம் கேள். உன்னுடன் உனக்கு முன்பாகவே பிறந்த அண்ணன் ஒருவன் இருக்கிருன். அவன்தான் அறிவு என்பவன். நீ அவனைப் பற்றி நினைப்பது கூட இல்லை அவனைக் கவனிக்க வேண்டியது உன் கடமை யல்லவா? அவன் விஷயமாக உன் சிந்தனை சக்தியைச் சிறிது நேரமேனும் செலவிட்டு அவனை மகிழச் செய்ய வேண்டாமா? உன் அண்ணனை நீ அன்புடன் நேசித்து வந்தாலல்லவோ அவன் வலிமையும் வனப்பும் அடைந்து உனக்கும் பெருமையைத் தருவான். சமயங்களில் உதவி செய்யக்கூடிய உற்ற நண்பன் உனக்கு யார் இருக்கிருர்கள்? "உடலை வளர்ப்பதுடன் உயிரையும் வளர்" என்பது பெரியோர் உபதேச வாக்கு. அறிவே ஆன்மா. ஆன்மாவே உயிர். அறிவை போஷித்து வளர்த்தால் ஆன்மாவாகிய உயிரும் வளரும். நீயும் நீடூழி வாழ்ந்து சுகமடைவாய்.

ஆதலால் உன் அறிவுக்கு ஊக்கமும் மகிழ்ச்சியும் அளிக்கக்கூடிய விஷயங்களில் உன் சிந்தனை சக்தியைச் செலுத்து. எந்த விஷயங்களைச் சிந்தித்தால் அறிவு ஆனந்தமடையும்? எதில் அதற்கு பரமப் பிரியம்? உண்மையும் கண்யமும்

கொடு நோய் மிடியால் குவலயத் துள்ளார்
மடியா திருப்ப மனமகிழ்ந் தருள்வாய்

நிறைந்த விஷயங்களைப் பற்றி சிந்திப்பதே அதற்கு ஆனந் தந்தரும். நமக்கும் பிறருக்கும் நன்மை தரக்கூடிய நல் லதும் ஞாயமுமான விஷயங்களில் நம் சிந்தனையைச் செல விட்டு வந்தால், நம் அறிவு மென்மேலும் பெருகி வலு வடைந்து அளவற்ற ஆற்றலும் ஆனந்த உணர்ச்சியும் மேலிட்டு, மிகப் பெரிய அரிய காரியங்களையும் சாதித்து நமக்குக் கீர்த்தியைக் கொடுக்கும்! மகா சக்தி பொருந்திய தாகி அறிவுக்கறிவாகிய ஆறுமுகக் கடவுளின் அறிவும் நமக்குக் கிடைக்கும்படி செய்யும்! அழிவற்ற ஆனந்தமும் செல்வமும் நமக்களிக்கும்!

மனமே! உன் சுய நன்மைக்கும் பெருமைக்குமாக உன் சிந்தனை சக்தியை விணக்கி நீ அடைந்த சுகமும் செல் வமும் நிலையற்றதாகி மறைந்து போகும். அறிவாலடையும் பொருளே பொருள்! ஆனந்தமே ஆனந்தம்! அது என்றும் அழியாது நிலைத்திருக்கும். ஆதலால் இனியேனும் உன் அறிவுக்குகந்த விஷயங்களில் உன் சிந்தனையைச் செலுத்த முயற்சி. தினம் சிறிது நேரமேனும் இதைச் செய்து, சிறுகச் சிறுக இதை உன் சுபாவ குணமாகும்படி செய்து கொள். நீ மேன்மை யடைவாய்.

இதோ! இன்று உன் அறிவுக்கு ஊக்கமளிக்கும் விஷ யற்களில் சிலவற்றைச் சொல்கிறேன். வேறெங்கும் சிந் தனையைச் செலுத்தாமல் கவனமாய்க் கேள்.

கந்த தோட்டம் என்னும் பல அற்புதக் காக்ஷிகள் நிறைந்த பூங்காவனம் ஒன்று இருக்கிறது. கந்த தோட் டம் என்பதற்கு கந்தனின் தோட்டம் என்று பொருள். திருமுருகனாகிய கந்தசுவாமிக்கு சொந்தமாகிய பூங்கா. அத்தோட்டமே அழகு நிறைந்த இயற்கை வனப்புள்ள இவ்வுலகம். இந்தப் பூங்காவனத்தை உண்டாக்கியவன் முழு முதற் கடவுளாகிய முருக பிரான். அவனே இதற்கு ஆதி கர்த்தா! இந்தத் தோட்டத்திலுள்ள சர அசரங்க ளாகிய ஜீவப் பொருள்கள் யாவும் அவன் செய் வன்மை யால் ஏற்பட்டவைகளே. பார்க்கப் பார்க்கப் பார்க்கத்

கோப காமாதிக் குறைகள் சேராமல்
நீபமார் மார்பா நிதமெனக் கருள்வாய்

திகட்டாத ஆனந்தத்தை யளிக்கும் அழகு படைத்த செடி கொடி முதல், பட்சி, மிருகம், மனிதன்வரை யுள்ள யாவும் அவன் சிருஷ்டியே! அவனே இவைகளின் ஏகபோக உரிமையுள்ள எஜமானன்! எப்பொழுது அவனுக்கே இவையெல்லாம் சொந்தமாயிற்றோ அப்பொழுதே அவைகளைப் பராமரித்துக் காப்பாற்றும் பொறுப்பும் அவனைச் சார்ந்ததாய் விட்டது. உலகத்தில் எண்பத்து நான்கு லக்ஷம் ஜீவராசிகள் உள்ளன. அவைகள் ஒவ்வொன்றிலும் அநேக பிரிவுகள் இருக்கின்றன.

அவைகளின் வம்சங்கள் க்ஷீணித்துப் போகாமல் அவ்வப்பொழுது தானகவே வளர்ந்துகொண்டு வர திருமுருகன் அற்புதங்களைச் செய்திருக்கிறார். செடி வகைகளில் எருக்கு, இலவு முதலியவைளின் காய்கள் முற்றி வெடித்து விதைகள் சிறு பஞ்சுகளுடன் வெளிப்பட்டு காற்றின் வழியே சென்று பல இடங்களில் விழுந்து முளைக்கின்றன. "ஆடையொட்டி" என்னும் பெயருடைய நாயுருவி என்னும் செடியானது, விதைகள் நிறைந்த கதிர்கள் முற்றியவுடன் அதன்மேல் பரிசிக்கும் பக்ஷிகள், மிருகங்கள் மீதோ அல்லது மனிதர்களின் உடைகளின் மீதோ ஒட்டிக் கொண்டு வெவ்வேறிடங்களில் விழுந்து முளைக்கின்றன. சில சிறு செடிகளின் காய்கள் நன்கு முற்றியவுடன் அதன் மேல் குளிர்ந்த காற்றோ, மழைத் துளியோ பட்டதும் வெடித்து அதிலுள்ள விதைகள் நாலா பக்கங்களிலும் பரவி விழுந்து முளைக்கும்.

சில மரங்களின் கனிகள் பக்ஷிகளுக்கு ஆகாரமாகி அவைகள் எச்சமிடும்பொழுது விதைகள் அவைகளுடன் வெளிவந்து தரையிலோ, கட்டிடங்களின் மேலோ, பெரிய மலைப் பாறைகளின் மத்தியிலோ முளைத்துவிடும். சில செடிகளுக்கு விதை கிடையாது. அவைகள் தன் இலை, கொடி, கிளை, வேர், கிழங்குகள் மூலம் தன் வம்சத்தை விருத்தி செய்து கொள்ளுகின்றன.

கள்ளி வகைகளில் இரணகள்ளி என ஒருவகையுண்டு. அதன் இலைகளில் ஒன்றைக் கயிற்றால் கட்டி, தலை கீழாய்

கௌரியின் குமரா கலியுக வரதா
வைரியர் நல்வழி வாழ வழியருள்

காற்றோட்டமான இடத்தில் தொங்கவிட்டிருந்தால், சில தினங்களில் இலைகளின் ஓரங்களிலிருந்து வெள்ளை நிற முள்ள இளம் வேர்கள் வெளிவரும். இன்னும் சில நாளில் அவ்வேர்கள் வளர்ந்து அதன் அடியிலிருந்து இலைகள் உண்டாகி அநேகம் செடிகளாய்விடும். அதற்கு மண்ணோ, தண்ணீரோ இல்லாதிருந்தும் அந்த இலையிலுள்ள சத்துக்களைக் கொண்டே அவைகள் வளருகின்றன. சில தினங்களில் அந்த இலை காய்ந்து சருகாய்விடும். செடிகளோ நல்ல வலுவடைந்து பூமியில் நட்டதும் செழித்து வளரும்.

பக்ஷிகள் முட்டையிட்டு அடைகாப்பதாலும், ஆமை தன் சினைகளை மணலில் இட்டுப் பின்பு அதை மனதால் நினைப்பதாலும், மீன்கள் தண்ணீரில் அநேக முட்டைகளை இட்டுக் கொண்டே போய் திரும்பி அவைகளைப் பார்ப்பதாலும் அதன் சந்ததிகள் வெளிப்பட்டு விருத்தியடைகின்றன.

ஆகாயத்திலும் அநேக ஜீவன்கள் வாழ்கின்றன. சில பறவைகள் வானில் வெகு உயரத்தில் வசிக்கின்றன. அவைகள் அங்கிருந்தே முட்டையிடும். முட்டை கீழே விழத் தொடங்கும். மிக உயரத்தில் இருப்பதால் பல நாள் கீழ் நோக்கி வந்துகொண்டிருக்கும். அதற்குள் அதன் கரு வளர்ந்து சிறகு முதலிய அவயவங்கள் பூர்த்தியாய் வளர்ந்துவிடும். உடனே முட்டை வெடித்து அதனுள்ளே உள்ள குஞ்சு பரக்க ஆரம்பிக்கும். தான் வெகு கீழாக வந்துவிட்டதையும், தன் தாய்ப்பறவை மேலே யிருப்பதையும் அறிந்து உடனே மேல் நோக்கிப் பறந்து தன் தாயுடன் சேர்ந்து வாழும்.

என்ன அற்புதம்! என்ன ஆச்சரியம்!! இவ்வளவும் சிவ குமாரனின் உழைப்பாலல்லவோ நிகழ்கின்றன! இதை சிந்திக்கச் சிந்திக்க நம் அறிவு எவ்வளவு பூரிப்படைகிறது பார்!

சரவண பவவெனும் சடக்கரந் தன்னை
நிரந்தரம் சாற்றி நிலைபெற அருள்வாய்

இவ்வுலகம் பூராவும் அவன் உழைப்பால் உண்டான தோட்டம். அவன் வேறொருவருக்கும் குத்தகைக்கு விடுவதில்லை. தானே தன் மேற்பார்வையில் சிறந்த ஆட்களைக் கொண்டு சொந்தப் பண்ணை நடத்தி வருகிறான். அவன் உழைக்கும் உழைப்போ அதிகம். எதிர்பார்க்கும் பலனோ மிகச் சொற்பம். பகுத்தறிவு என்னும் எழில்நிறைந்த தளிர்களையும், ஜீவ தயை என்னும் மலர்களையும், தன்னலமற்ற சேவை எனும் காய்களையும், மெய்யுணர்வு நிறைந்த அன்பு எனும் கனிகளையுமே எதிர்பார்த்து விரும்புகிறான். அவன் களஞ்சியத்தில் மெய்யறிவு என்னும் முற்றிய விதைகள் தான் நிறைந்திருக்கும்.

என் அன்பிற்குகந்த மனமே! இவ்வுண்மையை உணர்ந்த பின்பேனும், அவன் தோட்டத்தில் அவன் உழைப்பால் உண்டாகி வளர்ந்த ஜீவ விருக்ஷங்களாகிய நாம், நம் எஜமானன் உளம் மகிழும் வண்ணம் அவன் விரும்பும் பொருள்களைக் காணிக்கையாகச் செலுத்தி வணங்கி, நம் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள வேண்டாமா? நம் சிந்தனா சக்தியால் நம் அறிவை நன்கு முற்றிய உயர்ந்த ரக விதைகளாக்கி திருமுருகன் களஞ்சியத்தில் சேர்த்துப் பெருமையடைய வேண்டாமா?

ஆம்! ஆம்!! கண்டுகொண்டேன். நன்கு அறிந்தேன் அறிவின் பெருமையை; அதன்பால் செலுத்தும் சிந்தனையின் ஆற்றலை! இனி கணமும் வீண் பொழுது போக்க மாட்டேன்! என் தமையனாகிய அறிவின் உயர்வை நன்கு உணர்ந்தேன். இப்புத்தாண்டின் ஆரம்பத்திலிருந்தே என் புது வாழ்வைத் தொடங்குவேன். என் அறிவை நேசித்து மகிழ்வித்து அவன் புத்திமதிப்படி நடந்து, கிடைத்ததற்கரிய மானிடப் பிறவியின் உண்மைப் பயனையும் புகழையும் அடைவேன்.

சானவி சேயே சண்முக மணியே
யானென தென்ற அகந்தையை அழிப்பாய்

இருண்ட வீடு

(அ. ராம மூர்த்தி)

இருண்ட வீட்டில் பூச்சி புழுக்களும் விஷ ஜந்துக் களும் தாராளமாய் வந்து அடையும். பக்குவமற்ற மனித னுடைய மனமும் இருண்ட வீட்டுக்கு சமமே. காமக் குரோதாதிகளாகிய விஷ ஜந்துக்கள் அம் மனத்தில் குடி கொண்டுவிடும். ஞான தீபத்தை ஏற்றி முதலில் அவ் வீட்டைப் பிரகாசப் படுத்த வேண்டும். பிறகு தானே அவ் விஷ ஜந்துக்கள் இருந்தவிடம் தெரியாமல் ஓடிவிடும்.

பாமர மனிதனுடைய மனம் சாதாரணமாக இருண்டு தானிருக்கிறது. அதனுல்தான் தவறு என்று தெரியாமலே தகாத செயல்களுக்கு அவன் இலக்காகிருன்.

ஞானப் பிரகாசம் பெருத மனிதனைத்தான் நான் இங்கு பாமர மனிதன் என்று குறிப்பிடுகிறேன்.

அஞ்ஞானி தானே சிந்திப்பதில்லை. சிந்தனையால் ஆளப்படுகிருன். தானே செயல்படுவதில்லை. ஆனுல் செயல்களுக்கு இலக்காகிருன். பொதுவாகக் கூறுமிடத்து அவன் இயங்கவில்லை. ஆனுல் இயக்கப்படுகிருன். சந்தர்ப் பங்கள் அவனை உலக வாழ்க்கையில் அமிழ்த்தி இழுத்துச் செல்கின்றன. மனதில் சுயப் பிரகாசம் இல்லாத காரணத் தால் அது இருண்ட வீடாக இருக்கிறது.

'தெய்வீகம்' என்னும் தீபந்தான் அவ் விருண்ட வீட்டை ஒளி பெறச் செய்ய முடியும்.

மனித மனம் இயற்கையாகவே தெய்வீகத் தன்மை வாய்ந்ததுதான், ஆனுல் தெளிவற்று அது இருண்டிருப் பதும் சகஜமே. தெய்வீக ஒளி சிறிது தோன்ற ஆரம் பித்து விட்டாலும் போதும். ஞானப் பிரகாசம் சுடர் விடும் வரையில் அவ் வொளி குன்ருது.

பரம் பொருளைப் பற்றிய தெளிவான விளக்கமே ஞான தீபம் ஆகும்.

சிந்தையின் உன்றன் சேவடி நாட்டி
அந்தமில் இன்பம் அடைந்திட அருளாய்

அறிவு வளர வளர ஞானப் பிரகாசம் தானே ஏற்படும். ஆனால் எத்தகைய அறிவு வேண்டும் என்பதுதான் பிரச்னை.

பாட்டரியில் மருந்து இருக்கும் வரையில்தான் டார்ச் லைட்டு எரியும். வெறும் நூலறிவு மருந்தில்லாத பாட்டரியைப் போன்றது. அது எரியாது. அதாவது இலௌகீக அறிவு எவ்வளவு தான் சேகரிக்கப்பட்டாலும் அது தெய்வீக இலட்சியத்தோடு அழுத்தப்படாத வரையில் ஞானப் பிரகாசமே கிட்டாது.

அறிவுக்கு நோக்கமுடைமை ஏற்படும் போது அது ஞானமாகிறது. தெளிந்த அறிவு தெய்வீக அறிவாகத் தான் இருக்க முடியும்.

மனம் ஒரு வீடு. அதுவே மனிதனுடைய இருப்பிடமும் ஆகும். அது இருண்டிருக்கும் வரையில் அவன் அஞ்ஞானி, பாமரன். அது ஒளி பெறும்போது அவன் ஞானி.

ஞான ஒளி, தோன்றினால் குன்றுது. என்றும் பிரகாசிக்கும். அந்த தீபத்தை மனிதன் ஏற்றி விடுவது என்பது இல்லை. அது தானாகவே பிரகாசிக்க வேண்டும். எனவே பரம்பொருள் 'சுயம் பிரகாசம்' என்றும் குறிப்பிடப்படுகிறது.

இருட்டிலேயே இருந்து பழக்கப்பட்டவனுக்கு 'ஒளி வேண்டும்' என்ற எண்ணம்கூட ஒரு வேளை இல்லாமற் போய்விடலாம். அப்படித் திடீரென்று ஒளி தோன்றினாலும் அவன் கண்கள் கூசும். அதனால் தான் கோடிக்கணக்கான மக்கள் இன்னும் பாமரர்களாகவே இருக்கிறார்கள். சமுதாயமே இருண்ட வீடாக இருக்கிறது.

சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும். எனவே மனித முயற்சியும் தேவையே. சுயம்பிரகாசத்தைப் பற்றிய ஒரு விழைவு தான் அத் தூண்டுகோல். கொஞ்சம் தூண்டினாலும் போதும் பக்குவமாக! இருண்ட வீடு இல்லாததாகிவிடும்.

சீர்பெறும் நின்பதச் சேவைகள் செய்யும்
ரபரும்பேற்றை மகிழ்ந்தெனக் கருள்வாய்

ஸ்ரீ வைஷ்ணவப் பகுதி 2

பல்லாண்டு

(அன்பன்)

எம்பெருமானுக்குத் தீங்கு ஏதேனும் நேருமோ? அந்தோ! அதை நினைக்கிற போதே மனம் அதிர்கிறதே! அவன் மங்களமாக இருக்க வேண்டும். அதை என்றும் விரும்புகின்றவர்கள் நாங்கள். எங்களைப் போன்ற தொண்டர்கள் இல்லையானால், மாதவனுக்கு மங்களா சாஸனத்தை இனிதாகச் செய்துகொண்டே இருப்பவர்கள் யார்?

எம்மானே! இவ்வுலகம் உனது அருளாடல் நிகழும் இடம். பரம பக்தியுடன் அவைகளைப் பார்த்து மகிழ்ந்து, பாடி ஆடிப் பணி செய்பவர்கள் நாங்கள். புனித உன்பிரிவு எங்களால் பொறுக்கவே முடியாது. பிரியமுள்ள நாங்கள் என்றும் உன்னைப் பிரிந்திருக்க மாட்டோம். எமக்கும் உமக்கும் இத்தொடர்பு என்றும் இருக்க வேண்டும்.

'அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு'

மணம் மலர்க்கு மதிப்பைத் தருகிறது. ஒளியால் இரத்தினத்திற்கு மதிப்பு உயர்கிறது. அதுபோல், மங்கையாய் இருந்தே என்றும் மகிமை பெறுகின்ற மலர்மகள், பாற்கடலில் வருமகள், உலகை வாழ்விக்கும் ஒருமகள், உன் திருமார்பிற்கு உரம் தரப் பெருமை பெறுகின்றாய் நீ பெருமானே! என்றும் உன்பால் இன்பம் கொண்டு, உன் வலப்பக்கத் திருமார்பில் வாழும் பெரிய பிராட்டியும், எங்கள் எண்ணம்போல் என்றும் மங்களங் கொண்டு இருப்பாளாக!

'வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு'

உன்னிடத்திலா, பகையா, அடபாவமே! உனது சௌந்தர்யம் கண்டு இளகாத மனம் இரும்பா என்ன?

சுத்தமெய்ஞ் ஞானச் சுடர்க்கொழுந் தேயென்
சித்தகன் மஷந்தனைத் தீர்த்தருள் புரிவாய்

மண்தலம் பிளக்க, விண்தலம் வெடிக்க, திக்குத் திகந்தம் அதிர, பொன்மலை உருகி ஓட, குண்டலங்கள் அசையச் சிரமசைத்துச் சென்று, அடங்காத பகையை அழித்து மீண்டு, உன்னதமான உன் திருமேனியைச் சூழும் ஒளியுடையான்; வலத்திருக்கரத்தில் என்றும் காப்புச் செய்து வாழ்பவன் ஆன திருவாழி யாழ்வான், சிறந்த கைங்கர்ய சிரேஷ்டன் அல்லவா! ஆம். அவனும் பல்லாண்டு பல்லாண்டாக என்றும் மங்களம் எய்தி இருப்பானாக!

'வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு'

கடலிற் பிறந்தான்; பாஞ்சஜந்யன் உடலில் புகுந்து வளர்ந்தான்; பிறந்திடம் வளர்ந்திடம் இரண்டையுமே மறந்தான்; ஆர்ந்த மதிபோல் உன் திருக்கரத்தில் அமர்ந்தான். அமயம் வாய்த்த போதெல்லாம் பரந்தாமா! உன் வாயமுதம் பருகுகின்றான்.

பச்சைக் கற்பூரம்போல் பரிமளிக்குமா, கமல மணம் கமழுமா, மதுரமயமா யிருக்குமா மாதவ! உன் வாயமுதம்; அந்தப் பாஞ்சசன்யத்திற்கு அயலாக அதை அறிந்த பாகவதர்கள் யார்?

பதினெட்டு அக்குரோணிப் படைகள் நிறைந்த பாரதப் போரிலும், அளவிலாமல் அக்கிரமங்கள் அதிகரிக்கும் எந்தக் காலத்தும், அகில உலகமும் அதிர முழங்கி, அநியாயத்தை அழித்து, இன்பங்கொள் உன் திருக்கரத்தில் என்றும் இருக்கும் ஸ்ரீ பாஞ்சசன்ய ஆழ்வானும்,பல்லாண்டு பல்லாண்டு மங்களத்துடன் இருப்பானாக என்றெல்லாம் பாடுகின்றார் பெரியாழ்வார். பாருங்கள் அவருடைய பாசுரத்தை!

அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி
ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற
மங்கையும் பல்லாண்டு

சூர்பிணி யால்நான் சோர்வடை யாமல்
பார்தனில் வாழ்ந்துமெய்ப் பதம்பெற அருள்வாய்

வடிவார் சோதி வலத்துறையும்
சுடராழியும் பல்லாண்டு
படைபோர் புக்கு முழங்குமப்
பாஞ்சசன்யமும் பல்லாண்டே.

(பொ - ரை:) அடியேன் முதலான அன்பர்களுடனும், உன்னுடனும், பிரிவிலாமல் (இத்தொடர்பு) என்றும் இருக்க வேண்டும். பேரழகுடன் நின்திரு மார்பின் வலப்பக்கத்தில் வாழ்கிற, என்றும் இளமை யுடைய திருமகளும் மங்களமாக இருக்கவேண்டும். உன் திருமேனியைச் சூழ்ந்து நிறைந்த பேரொளி யுடையவனுய், வலத் திருக்கரத்தில் என்றும் இருந்து, பகைவரை எரிக்கும் திருவாழி யாழ்வானும் மங்களமா யிருக்க வேண்டும். சேனைகளை யுடைய போர்க்களத்தில் புகுந்து ஒலிக்கும் அளவற்ற பெருமை யுடைய திருப்பாஞ்சஜந்யாழ்வானும், என்றும் மங்களமாக இருக்க வேண்டும், (எ - று).

கசிந்த பக்தி திருப்பணியாகக் கனிய வேண்டும். வாழ்க்கையே திருப்பணி செய்ய வாய்த்ததுதான். வல மார்பில் மங்கை; வலக்கரத்தில் ஆழியாழ்வான்; இடக்கரத்தில் சங்கரையன் மூவரும், இக்குறிப்பை எவர்க்கும் இனிது கற்பிக்கின்றனர். பயனை பணி செய்யும் இவர்கட்கும், பணியை ஏற்கும் பரமனுக்கும் பல்லாண்டு பாடுவது பழைய பண்பு; மேலான தருமம் இதற்கு அயலாக வேறில்லை; இந்நினைவிற்கு அயலாகி, உண்டிக்கும் உடைக்கும் உகந்தொல்கி, பாவம் பல செய்து பயனிழந்து வாழ்வாரைத் தெய்வந்தான் பாதுகாக்க வேண்டும்!

பக்தியின் சக்தி

(தொடர்ச்சி)

(ஆ. கி. ரங்கராஜன்)

பக்தி செய்வது அவசியமென்றும், பக்தியின் சக்தியால் பரமனைத் தன்வயப் படுத்தலாமென்றும் முந்தைய வர .

செந்திமா நகர்வாழ் சிவசுப்ர மணியே
வந்தனை செய்வோர் மனத்தொளிர் ஒளியே

லாறுகளால் அறிந்தோம். பக்தனுக்கு சோதனைகள் பலவும் ஏற்படும். அவற்றில் எதிலும் மனதைத் தளரவிடாமல் இறைவன்பால் செலுத்துதல் வேண்டும். பொதுவாக, சோதனை ஏற்படுவதென்பது சகஜமே! அது மானிடருக்குத் தவிர்க்க முடியாததாகும்.

இச் சோதனைகளை எதிர்த்து வெற்றி காணும்போது தான், மானிடரின் ஆற்றல் சுடர் விட்டுப் பிரகாசிக்கிறது.

பக்தியின் சக்தி வெற்றி அடையுங்கால், பாமரனும் பரமனாக மாறுகிறான். பக்தி பிரகாசிக்க வேண்டுமாயின் ஆசைகளாகிய பற்றுக்களை நீக்கிக்கொள்வதே முதல் காரியமாம். பற்றின்றி வாழ்பவரே சாதுக்களாம். சாதுக்களுக்கு சர்வேஸ்வரன் தொண்டு புரிவன். சாதுக்களின் பண்பட்ட உள்ளமும் பக்தியுமே இதற்குக் காரணம். நிற்க, பற்றற்றோர் இருவர் பற்றுதல் கொண்டதை ஈண்டு பகருவோம்.

சர்வ மங்கள மூர்த்தியான கண்ணபிரான் வெளி மயக்தாக சாந்திபினி முனிவரிடம் கல்வி கற்றுக் கொண்டிருந்த நாளில், சுதாமா என்னும் ஓர் சிறுவன் கண்ணனுக்கு நண்பனாக வாய்த்தான். கண்ணனிடம் அபார அன்பு செலுத்தினன். கண்ணனும் அவன்பால் பிரேமை கொண்டான். ஓர் நாள் சுதாமா ஓர் நீர் நிலையில் இறங்கியபோது அதிலொரு முதலை அவனைப் பற்றிக் கொண்டது. ஆதரவு எவரும் இல்லாமல் "கண்ணா என்னைக் காப்பாற்று!" என்று அலறினன் சுதாமன். உடனே கண்ணன் தோன்றி சுதாமனை இழுத்து முதலையிடமிருந்து மீட்டனன்.

கண்ணன் மனித உருக்கொண்ட தெய்வம் என்பதை அவனது லீலைகளைக் கண்டும் கேட்டும் ரசித்திருந்த சுதாமன், தன்னை முதலையிடமிருந்து மீட்டபொழுது நன்கு உணர்ந்திருந்தான். அவன் கண்ணனிடம் கொண்டிருந்த நட்பு நாளடைவில் பக்தியாக மாறியதில் வியப்பில்லை.

ஓர் நாள் மாலை சுதாமன் பொறித்த அவலை ஓரிடத்தில் உட்கார்ந்து தின்று கொண்டிருந்தான். தற்செயலாக அங்கு

சேவலாங் கொடியாய்! சிவகிரித் தேவே!
மூவகைத் தர்பம் முற்றிலும் தீர்ப்பாய்

வந்த கண்ணன் அவன் வைத்திருந்த அவலில் ஆசை கொண்டவன்போல, "சுதாமா! எனக்குக் கொஞ்சம் அவல் தர மாட்டாயா? என் நாக்கில் ஜலம் ஊறுகிறது" என்ருன்.

வாலிப முறுக்கேறிக் கொண்டிருந்த சுதாமன், "நான் தரமாட்டேன். அவல் எனக்குத்தான் வேண்டும்" என்று சற்று கர்வமாய்ப் பதிலளித்தான். கண்ணன் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

"சுதாமா! இரு. உன்னைப் பார்த்துக் கொள்கிறேன். உன் கையினலேயே என்றைக்காவது ஒரு பிடி அவலைப் பெற்றுக் கொள்ளாமல் போனல் நான் கண்ணனல்ல!" என்று கூறி அவனை விட்டு எங்கேயோ போவதுபோல் மறைந்து விட்டான். அதைக் கேட்ட சுதாமன் திடுக்கிட்டுக் கண்ணனைப் பல இடங்களில் தேடினன். அகில சராசரங்கள் அனைத்திலும் நிறைந்த கண்ணன் தன்னிடமும் உள்ளான் என்பதை உணராத சுதாமனல், எவ்வாறு கண்ணனைக் காணமுடியும்? தேடித்தேடி அலுத்த சுதாமன் வீடு திரும்பினன். அந் நிகழ்ச்சிக்குப் பின் கண்ணனை சுதாமனல் சந்திக்க இயலவில்லை.

குசேலர் ஆதல்

நாட்கள் மாதங்களாக ஓடி வருடங்களாகப் பறந்தன. இடையே சிறிது காலம் சுதாமன் கண்ணனை மறந்திருந்தான். அப்போது கண்ணனின் திருவிளையாடல் ஆரம்பித்தது. செல்வச் செருக்கிலும், யௌவன முறுக்கிலும், உத்தம நாரீமணியாகிய சுசீலையுடன் வாழும் ஆனந்தத்திலும் தன்னையும் மறந்திருந்த சுதாமனுக்குக் கண்ணன் பல குழந்தைகளை அளித்தான். இருபத்தேழு குழந்தைகள் எனக் குசேலோபாக்யானமும் இதர புராண வரலாறுகளும் கூறுகின்றன.

சுதாமனின் பொருள் சிறிது சிறிதாக சிறிது நாட்களில் குறைந்து மறைந்தது. வறுமை தோன்றியது. சுதாமன் அந்

சைவம் வளர்த்த சம்பந்த குருவே
மைவரும் கண்டன் மைந்தனே அருள்வாய்

தணனுதலின் அறநெறி வழுவாது செல்வமுள்ள காலத்தில் அதிதிகளை ஆதரித்தது போலவே வறுமை நேர்ந்த காலத்திலும் ஆதரித்தான். ஆதலின் சுதாமனை மக்கள் போற்றினர். "இப் பெரியாரால் உலகம் உய்யும்" எனவும் வாழ்த்தினார்கள். ஆனால் சுதாமரோ, நாளடைவில் குசேலராக மாறினர். (குசேலம்-வறுமை)

சோதனையின் தீவிரம்

செல்வம் குறையத் தொடங்கும் போதே "யாவும் கண்ணன் செயல்" என்று உணர்ந்தார் குசேலர். "மாடு, மனை, மக்கள், சுற்றம், செல்வம் எதுவும் நிலையற்றது. இறைவனாகிய கண்ணனை வழிபடுவதே நிரந்தரப் பேரின்பம் தரவல்லது" என்று கருதிய அவர், அல்லும் பகலும் அனவரதமும் அச்சுதனை அகத்தில் நினைந்து வணங்கி வழிபடலானார்.

நாளாக ஆகக் கண்ணனின் சோதனை தீவிரமாகியது. ஆகவே குசேலரின் கைப்பொருள் கரைந்து யாசகத்திலும் புக நேர்ந்தது.

அவ்வாறு ஐயம் புகுந்து அரிசி பெற்று அமுது செய்து உண்டபோதும், அவர் அதிதிகளைப் புறக்கணித்ததில்லை. சில சமயங்களில் கண்ணனே அதிதிகளாய்த் தோன்றி அன்று அவர்கள் உணவருந்தாதபடி செய்து விடுவன். ஆனால் குசேலர் மனதிலோ குதூகலம் தாண்டவமாடும்.

இறைவனின் தோற்றம்

மற்றோர் நிகழ்ச்சி யாதெனில், ஓர் நாள் குசேலர் கொணர்ந்த அரிசி முதலியவற்றால் சுசீலை அப்பம் தயாரித்துத் தன் குழந்தைகள் சகிதம் மாதவனுக்கு அர்ப்பணித்தாள். உடனே கண்ணன் தோன்றி அந்த அப்பத்தை வாங்கி உண்டு மறைந்தான். கண்ணனைத் தரிசித்த சுசீலை களிப்புக் கடலில் ஆழ்ந்தாள். அச் செய்தியைத் தன் கணவரிடம் கூறினாள்.

சொற்சுவை ததும்பும் தோத்திரம் யாத்துன்
பொற்பதம் ஏத்தும் போதமெற் கருள்வாய்

குசேலரின் உள்ளம் குதூகலித்தது. "ஆஹா! மாதவா! முகுந்தா! இந்த ஏழைகள் தயாரித்த பதார்த்தத்தை உண்பதற்கும் உனக்குக் கருணை உண்டாயிற்று? தீனதயாபரா! உனது மகிமையை யான் என்னென்று வர்ணிப்பேன்? சிறு வயதில் நாம் கூடி விளையாடினோம். பிறகு இடைக்காலத்தில் உன்னைப் பிரிய நேரிட்டது. இதுகாறும் உனது தரிசனம் எனக்குக் கிடைக்கவில்லை யாயினும், உனது பேரருள் என்பால் ஒளி வீசிக் கொண்டிருக்கிறது என்பதை உணருகிறேன்; நானே பாக்யவான்! உனது அடிமைகளாகிய அடியேனது மனைவி மக்களுக்கேனும் உனது சேவை அளித்தனையே! துவாரகைக்கு மன்னனாய் விளங்கும் நீ தொண்டர்க்கு எளியவனாகவும் விளங்குகிறாய்! ஸாது ஜன ரக்ஷகா! பக்த பரிபாலனா! ஸர்வலோக நாயகா! உனது கருணை மேன்மேலும் பெருக வேண்டுகிறேன்" என ஆனந்த பாஷ்பம் ததும்ப அச்சுதனை நினைந்து ஆடிப் பாடித் துதித்துப் பிறகு சுசீலையை நோக்கி, "ப்ரியே! இனி மேல் அனுதினமும் கண்ணனுக்கு நாம் தயாரிக்கும் ஆகாரத்தை ஆராதித்து அவன் அமுது கொண்ட பின்பே நாம் பிறருக்கு அளித்து உண்போமாக!" என்றார். கணவரின் கருத்தறிந்து செய்யும் கற்புடையாளான சுசீலையும் அதற்கு உடன்பட்டாள்.

வேண்டுதலும் வேண்டாமையும்

சில நாட்கள் அவர்கள் நினைத்தவாறு நடந்தன. பின்னர் கண்ணன் தரிசனமளிப்பதையும் நிறுத்திவிட்டான். யாசகத்திலும் எதுவும் கிடைப்பதும் தடைப்பட்டது. அனைவரும் பட்டினியால் வாடினர் குசேலர். ஆசைகளாகிய பற்றுக்களை ஒழித்தவராகையால் பற்றற்றவனுகிய பரந்தாமன் மீதே பற்றுகொண்டு அவனையே தியானித்து வந்தார். ஆனால் குழந்தைகள் பசியால் வருந்தும் பரிதாபத்தைக் காண சுசீலைக்கு ஸகிக்க முடியவில்லை. தானும் கணவரும் பட்டினியாய்க் கிடப்பினும் பிள்ளைகளை யாவது எவ்வாறேனும் காப்பாற்ற வேண்டுமென அவளது உள்ளம் துடித்தது. (தொடரும்)

சோதியேல் என்னைச் சுகுண கெம்பீரா
நீதி சொரூபா! நித்திய! சரணம்

ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம்

(V. S. Venkataraman)
33 ஆம்பை.

அசுரரால் நூலின் நுட்பம் அறிய முடியாதே.

நந்தகோபர் வழக்கப்படி ஏகாதசி விரதம் இருந்தார். ஜனார்த்தனனைப் பூசித்தார். மறுநாள் துவாதசி ஒரு நாழிகையே காலையில் இருந்தது. சம்பு முனிவர் சட்டப்படி ஏகாதசி இரவில் 12 மணிக்குமேல் நீராடலாம் என்பதை அறிந்தவர், நந்தகோபரானதால் யமுனை யாற்றில் இறங்கி முழுகினர். தண்ணீருக்குத் தேவனை வருணனிடம், "இரவில் நீராடுவோரை நீ பிடித்து வரவேண்டும்" என்ற பொதுவான கட்டளையைக் கேட்டு, அதன்படியே நடந்து வரும் ஓர் அசுர வேலைக்காரன் நந்த கோபரைப் பிடித்து வருண லோகத்திற்கு அழைத்துச்சென்ருன்.

வருணலோக தரிசனமும்
கண்ணனிடம் பிறர் வைத்த மதிப்பும்
வருந்தியல்லவோ அறியமுடியும்.

இடையர்கள் நந்தகோபரைக் காணேமே என்று கதறினர்கள்.

பிரபுவான கண்ணன் நந்தகோபரை அழைத்துவர வருணலோகம் சென்ருர். வருணன் கண்ணனைக் கண்டதும் திவ்யாலங்கார பூஜையைச் செய்தான். இப்போது தான் வருணலோகபாலப் பதவியின் பலனை அடைந்தேன், எல்லாம் வல்ல உமக்கு நமஸ்காரம்.

மூடனும், செய்வதை நன்ருக அறியாதவனும் ஆகிய என் வேலைக்காரன் உங்கள் தந்தையை அழைத்து வந்து

சௌரியின் மருகா சதுர் மறைப் பொருளே
கௌரவம் சேர்தவம் கனிந்தெனக் கருளாய்

விட்டான். நீங்கள் பொறுத்துக் கொள்ள வேண்டும். உம் தந்தையை அழைத்துப் போகலாம். எனக்கு அருள் செய்யும் என்று வருணன் வேண்டினன்.

கண்ணன் நந்தகோபரைக் கோகுலத்திற்கு அழைத்து வந்தார். நந்தகோபருக்கு ஒருபுறம் காணமுடியாதன இரண்டு கண்டோம் என்ற வியப்பு. மற்றொருபுறம் நமக்கு அத்தகைய கண்ணனது அருள் கிடைக்குமா என்னும் ஏக்கம். வருணலோகங் கண்ட வியப்பு ஒன்று. பிறர் கண்ணனிடம் வைத்த மதிப்பைக் கண்ணால் கண்டது மற்றொரு வியப்பு.

வைகுண்டலோகக் காட்சி

நந்தகோபர் "தாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்றபடி, தம் உறவினரிடம் தாம் கண்ட இரண்டு அதிசயங்களையுங் கூறினர். அந்த உறவினர், அக்குரூரர் முன் வைகுண்ட லோகத்தைக் கண்டதுபோலவே நந்தகோபர் சொல்லச் சொல்ல, வைகுண்ட லோகங் காணவேண்டும் என ஆவல் கொண்டார்கள். பக்தர்கள் வேண்டுவதே யீவானாகிய கண்ணன், தன் உறவினருக்கு எல்லாம் தனது சொந்த இடமான வைகுண்டத்தைக் காண்பித்தார்.

அங்குங் கண்ணன் இங்குங் கண்ணன்

நந்தகோபர் முதலானோர் ஸ்ரீ வைகுண்டநாதனை ஸ்ரீ வைகுண்டத்தில் கண்டார்கள். அதே சமயத்தில் இடையர் வேடத்தில் அவர் இருப்பதையும் கண்டார்கள்.

ராஸக்கிரீடையின் முகவுரை பேரின்பமே பெருவாழ்வு

தண்ணீரை வேண்டுமளவு குடித்தவனுக்கு நல்ல மணமுள்ள குளிர்ந்த எந்தப் பானமும் தேவையாய் இருக்காது.

பேரின்பம் நுகர்ந்தோர் சிற்றின்பங்களை நாடவே மாட்டார். இது உலகில் கண்ட உண்மை.

யோகமாயை

எது உண்மையில் இல்லையோ அதுமாயை. மனத்தின் நிறைவே (மனவடக்கம்) யோகம். எல்லா உயிர்களிடத்தும் மன நிறைவு உள்ளது. மனநிறைவு கொள்ளாத உயிர்கள், காமம், கோபம், பயம், அன்பு, தொடர்பு, பற்று முதலிய மாயைகளாம் அனைத்தையுமோ ஒரு சமயத்து ஒன்றை மட்டுமோ கொள்ளும்.

அவ்வவ்வுயிர்கள் தத்தம் தகுதிக் கேற்ப மன நிறைவையோ மாயைக் குணங்களையோ கொண்ட போதிலும், பகவான் தன் சொருப மகிமையால் தன் அருளுக்குப் பாத்திரம் ஆகின்றவர் எப்படியிருந்தாலும் அவர்க்கு முக்தியையே தருகிறார். எங்கும் இது உண்டு.

பகவானும் அவதாரங்களில் யோகமாயையைப் பற்றுதல்

பரநிலை என்பது பகவானின் மேலான நிலை. அது சனகாதி முனிவர்க்கே எட்டியும் எட்டாமலும் இருக்கும் நிலை. விபவநிலை என்பது பரநிலையினும் வேறு. விபவநிலை பகவான் தானாகவே விரும்பி ஏற்கும் அவதார நிலை. எளிமைக் குணம் பகவானிடம் இருப்பதுவே யானாலும் மிகமிக அக்குணம் கிருஷ்ணனிடமே (கிருஷ்ணவதாரத்தில்) காணப் பட்டது.

1 "தேடினும் காணப்பெறாத கண்ணன், தடுத்துங் கேட்காமல் வீடுதோறும் புகுந்து விடுகிறான். இது எவ்வளவு எளிமை.

2 எல்லாவுலகும் தன்னை அடையவேண்டி யிருக்கத் தான் சென்று நந்தகோபன் முதலானோரை அண்டினது எளிமையினும் எளிமையல்லவோ.

ஞானவேல் கரனே ஞானிகள் போற்றும்
மோன நெறியினை மொழிந்தருள் வாயே

3 யோகமும் மாயையும் கண்ணனால் வெளிவந்தவை யாகக் கண்ணன் யோகத்தையும் மாயையும் கொண்டது மிக எளிமையே யாகும்.

4 யோகமாகிய நித்யானந்தம் தன்னுடையதாக விபவ லீலையாய் மாயையும் கண்ணன் கொண்டது மனிதரைத் தன் பால் சேர்த்துக் கொள்ளுதற்கேயாம்.

இன்பம்பெறப் பலவழிகள்

இன்பம் பெறுவதற்குரிய வழிகள் பலவற்றுள்ளும் சிறந்ததாக அன்று கண்ணன் நடத்தியது ராசக்ரீடை. ராஸக்ரீடை என்றால் பேரின்ப விளையாட்டு. அது கடவுள் உகந்தது. அவ்விளையாட்டு நம் மனித தருமங்களையும் இறைவனது திருவுளத்தையும் திருவடிப் பெருமையையும் அடிப்படை யாகக் கொண்டது. "ரஸோவைஸ:" ரஸம்ஹ்யேவாயம் லப்த்வாநந்தீபவதி" கோஹ்யேவாந்யாத் க: ப்ராண்யாத்" என்பவை வேதவாக்கியங்கள். ரஸம்—சுவை பேரின்பம். இறைவனிடத்தது அது—அந்த இன்பம் அவனிடமிருந்து பெறுதலவன் மோக்ஷ உலகில் வாழ முடியும் என்பதுவே வேத வாக்கியப்பொருள்.

(1) பேரின்பமே பெருவாழ்வு. (2) யோகமாயை. (3) யோகமாயையைப் பகவான் பற்ற வேண்டிய காரணம். (4) இன்பம் பெறப் பல வழிகள் என்ற நான்கு தலைப்புகளின் கீழும் எடுத்துக்கூறியன. பகவான் கண்ணனது ராஸக்கிரீடை, திவ்யமானுட சம்பந்தம் பெற்ற பகவத்லீலையே தவிரக் காமப்பித்தன் செய்த செயல் ஆகாது என்பதை ஓரளவு விளக்கின. இடைச்சிகள் தெய்வாம்சம்பெற்ற முனிவரேயான மனிதர்—இடையர் தலைவனான கண்ணன் மூவரும் முதல்வனும் ஆன எல்லாம்வல்ல இறைவன் இந்த இடைச்சிகளது புத்திசக்தியும், கண்ணனான திவ்யவஸ்துவின் சக்தியும் ராஸக்கிரீடையில் இனி விளங்கப் போகின்றன. (தொடரும்)

தண்டாயுத நின் தாளிணை மலரைக்
கொண்டா டும்பணி கொடுத்தெனைக் காப்பாய்

பெரிய புராணச் சித்திர விளக்கம்: 14.

அரிவாட்டாய நாயனர்

(கி. வா. ஜ.)

சோழநாட்டில் கணமங்கலம் என்பது நெல் வளம் மிக்க பதி. அவ்வூரில் வேளாண் குலத்தில் தாயனர் என்ற அன்பர் ஒருவர் நல்லொழுக்கமும் சீலமும் உடையவராய் இல்லற வாழ்வில் சிறந்து நின்ருர். சிவபெருமானிடத்தில் மாருத அன்புடையவர் அவர். தான்படைத்த பொருள்களில் நல்லனவற்றைத் தேர்ந்தெடுத்துத் தன் கணவனுக்குத் தருவது நன்மகள் இயல்பு. அப்படி நல்ல பொருள்களை இறைவனுக்குக் காணிக்கையாக்க வேண்டும் என்னும் ஆர்வம் உடையவராக இருந்தார் தாயனர்.

நாள்தோறும் சிவபெருமான் திருக்கோயிலுக்குச் செந்நெல் அரிசியும், செங்கீரையும், மாவடுவும் அனுப்பி இறைவனுக்கு நிவேதனம் செய்யும்படி செய்வதை விரதமாகக் கொண்டிருந்தார் அவர். எந்தக் காரியத்துக்குத் தடை வந்தாலும், இதை மாத்திரம் நிறுத்தாமல் செய்து வந்தார். கடைப்பிடியில் பிறழாமல் நின்ற அவருடைய அன்பை ஊரினர் ஓரளவு அறிந்திருந்தனர்.

குறிக்கோள் ஏதும் இல்லாமல் வாழ்கிறவர் வாழ்வு வீணகும். குறிக்கோள் என்று ஒன்றை மேற்கொண்டு இன்னல் வரும்போது அதை நழுவவிடுகிறவர்கள் கோழைகள். அவர்கள் இறைவன் திருவருள் கிடைத்தாலும் நழுவ விட்டு விடுவார்கள். எந்த நிலையிலும் எந்த இடர்

தானமும் தவமும் சழக்கிலா தியற்ற
வானவர் தலைவா வலிமிக அருள்வாய்

வந்தாலும் தாம் கொண்ட கொள்கையை விடாமற் பிடித்து ஒழுகுகிறவர்கள் உலகில் உயர்ந்த நிலை பெறுவார்கள்.

இறைவன்பால் அன்புடையவர்களுக்குச் சோதனை பல நிகழும். தாம் பெற்றவற்றை உற்றார் உறவினரோடு உண்டு வாழ்வதற்கே பல தடைகள் உண்டாகும். அப்படியின்றி இறைவனே தந்தையென்றும் அவன் அடியார்களே தமர் என்றும் எண்ணி வாழ்கிறவர்களுக்கு வரும் இடையூறுகளைச் சொல்லவா வேண்டும்.

"சுடச்சுடப் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு"

என்பர் வள்ளுவர். துன்பம் வரவர அதனால் தளர்ச்சியடையாமல் தம் கொள்கையைப்பற்றி நின்று வெற்றி பெறுபவர்களே தவத்திற் சிறந்தவர்களாவார்கள்.

தாயனாருக்கு இறைவன் திருவருள் சோதனைகளை உண்டாக்கியது. அவருடைய செல்வம் வரவரக் குறையத் தொடங்கியது. ஆயினும் அவர் இறைவனுக்குச் செந்நெல்லும் செங்கீரையும் மாவடுவும் நிவேதனம் செய்யும் பணியினின்றும் தவறாமல் நின்றார். யானை உண்ட விளங்கனிபோல அவர் செல்வம் முற்றுமே மறைந்தது. தாயனார் தம்முடைய உணவுக்கே வழியின்றித் திண்டாடினார். அப்போதும் அவர் தம்முடைய தொண்டை நிறுத்தவே இல்லை. கூலி வேலை செய்யப் புறப்பட்டார். செந்நெல்லும் கார் நெல்லும் அறுக்கும் தொழிலில் கிடைத்த நெற்

திருவடித் தொண்டைத் திறமுடன் ஆற்றிப்
பெரும் பொருள் காட்சி பெற எனக் கருள்வாய்

கூலியைக் கொண்டு வருவார். செந்நெல்லாகக் கிடைத்த கூலியை அப்படியே இறைவனுக்கு வழங்கி விடுவார். கார் நெல்லைத் தம்முடைய உணவின் பொருட்டுப் பயன்படுத்திக்கொள்வார். வளவாழ்வில் தாம் வாழ்ந்த ஊரில் கூலி வேலை செய்யலாமா என்று அவர் நினைக்கவில்லை. 'எம் பெருமானுக்கு நிவேதனம் செய்யும் செந் நெல் நமக்குக் கிடைக்கிறதே!' என்று அவர் இன்புற்றார்.

இறைவன் பின்னும் சோதனையைக் கடுமையாக்கினான். ஊர் முழுவதுமே செந் நெல் விளைந்தது. கதிரை அறுத்துக் கூலி கொண்ட தாயனாருக்குக் கூலி முழுவதும் செந் நெல்லாகக் கிடைத்தது. செந் நெல்லையெல்லாம் இறைவன் நிவேதனத்துக்கே அர்ப்பணம் செய்யும் இயல்புடையவர் ஆதலின் அந்நெல் முழுவதையும் சிவபிரானுக்கே வழங்கினார். 'நமக்குச் சோறு இல்லையே!' என்று அவர் வருந்தவில்லை. இறைவனுக்கு நிவேதனம் செய்ய இவ்வளவு கிடைக்கிறதே என்று மகிழ்ச்சியடைந்தார்.

அவருடைய மனைவி வீட்டின் புறக்கடைத் தோட்டத்தில் விளைந்த கீரையைப் பறித்துப் பக்குவம் செய்து படைக்க அதையே அவர் உணவாக உண்டு வந்தார். அந்தக் கீரைக்கும் பஞ்சம் வந்துவிட்டது; அப்போது வெறுந் தண்ணீரைக் குடித்து வயிற்றை நிரப்பினார் தாயனார்.

இந்த நிலையில் ஒரு நாள் தாம் ஒரு கூடையில் செந் நெல் அரிசியும் மாவடுவும் செங் கீரையும் சுமந்துகொண்டு

தீவினை யகற்றித் திருவழி நடக்க
ஆவினன் குடிவாழ் ஆண்டவா அருள்வாய்

சிவபிரான் திருக் கோயிலை நோக்கிச் சென்றார். அவருடன் அவர் மனைவியார் பஞ்ச கௌவியத்தை ஏந்திச் சென்றார்.

உணவிலா இளைப்பினால் வழியில் ஒரு வெடிப்பில் கால் தடுக்கித் தாயனார் வீழ்ந்தார். அவர் கூடையிற் சுமந்து சென்ற பொருள்கள் யாவும் அந்த நிலவெடிப்பில் விழுந்துவிட்டன. "இனிக் கோயிலுக்குப் போய் என்ன செய்வது?" என்று எண்ணினார். 'எம்பெருமானுக் கென்று எடுத்துச் செல்லும் இவை இங்கே விழுந்து விட்டன. இறைவன் இல்லாத இடம் ஒன்று இல்லை. இவை விழுந்து சிதறிய இவ்விடத்திலும் அவன் இருக்கிறான். இந்த நிவேதனப் பொருள்களை அவன் திருவுள்ளம் கொண்டால் இந்த இடத்திலும் ஏற்றுக் கொள்ளலாம். அப்படி ஏற்றுக் கொள்வதற்கு நான் புண்ணியம் செய் திருக்கவேண்டும். மாபாவியாகிய நான் விரும்புவதற்காக அவ்வாறு இறைவன் செய்வானா? இந்தப் பிறவி இருந் தென்ன, போய் என்ன?' என்று மனம் நைந்தார் அவர். 'இனி இங்கே வாழ்வதாற் பயன் இல்லை' என்ற எண்ணத் தால் தம்மிடம் இருந்த கருக்கறிவாளால் தம் கழுத்தை அரியத் தொடங்கினார். 'என்னுடைய அன்பும் புண்ணிய மும் மிகுதியாக இருந்தால் இவ்விடத்திலேயே எம்பெரு மான் இப் பொருள்களை ஏற்றருள்வானே! என் அன்பு போதாது என்பதை நானே நன்கு அறிவேன்' என்று ஏங்கிக் குலைந்து அவர் ஊட்டியை அரியப் புகும்போது இறைவன் திருவுள்ளம் கனிந்தான். அதற்குமேல் சோதனை செய்ய ஐயனுக்கு உள்ளம் இல்லை.

இன்னலை நீக்கும் இறைவனே வாவா
பன்னிரு கண்ணுடைப் பரமனே வா வா

உடனே அந்தப் பிளப்பிலிருந்து ஒரு திருக்கரம் தோன்றி ஊட்டியை அரிந்த தாயனார் கரத்தை வாளோடு பற்றி நிறுத்தியது. அதே சமையத்தில் வெடுக்கு வெடுக் கென்று மாவடுவைக் கடிக்கும் ஒலி கேட்டது. இந்த அற்புதத்தைக் கண்ட தாயனார் இறைவன் கருணையை நினைத்து உருகினார். "அடியனேனுடைய அறிவின்மை யைக் கண்டும் அடியேனை ஆளாக்கிக் கொள்ளும் பொருட்டு இங்கே வெடிப்பிலும் எழுந்தருளி அமுது செய்தருளிய பெருமானே! பரஞ்சோதியே! உமா தேவியைப் பங்கிலு டைய அப்பனே! பவளமேனியனே! புரிசடைப் புராணனே! போற்றி போற்றி" என்று வாழ்த்தினார். அப்போது இறைவன் இடப வாகனனாக எழுந்தருளி, "நின்னுடைய விரதம் நன்று. நின் அன்பைக் கண்டு உவந்தோம். இனி நீ நின் மனையாட்டியோடு எம் அருகில் வாழ்வாயாக" என்று அருளிச் செய்து மறைந்தான்.

"இறைவன் இவ்விடத்தில் அமுது செய்யும் பேறு பெற்றிலேனே" என்று அரிவாளினால் தம் கழுத்தை அரியப் புக்கமையால் அவருக்கு அரிவாள் தாயநாயனார் என்ற பெயர் உண்டாயிற்று.

கொண்ட கொள்கையிற் பிறழாமல் நின்று, அது பிறழும்போது உயிரையும் விடத் துணிந்தது பெரு வீரம். இத்தகைய வீரமே நாயன் மார்களிடம் உள்ள சிறப்பு.

———

IS LIFE A DREAM?

Life is but a slow-moving dream, and dream is but a fast-ending life. Life is subjective and matter is objective. Life is related to matter by the five senses. These five senses are the channels of communication of what they perceive. Matter exists not only in gross form, but also in minute and subtle manifestations. The principal with whom the five senses communicate is the consciousness of life. The understanding centre in man is the mind, the conscious mind. The five senses act as telephonic wires, but the impressions are felt received, remembered or forgotten only in the mind centre. Matter is as countless in the world of diversity as life. Its expression and individuality are beyond number. The Lord having created lives and matter, He has correlated them by the five senses. Sound, touch, form, taste and smell, (sabda, sparisa, roopa, rasa, gandham) are the five-fold contacts established between life and matter. These are the five reactions of life to matter. But for these five reactions, the world would be dead to life. The five senses are the gateways through which the mind of man is influenced by matter. Mind makes the man. Life and mind are *subjective* and matter is *objectlve*. The five senses establish the relation between both. The primordial five elements, their properties, objective as they are, are conveyed to the mind by the five

senses and the whole universe is but the subjective cognition of the soul within. It necessarily follows, the world is not the same for all lives. Different minds take different subjective impressions. Outside those impressions, the world of matter is non-existent to life. The world of matter, matters not to the world of life, except to the extent and only to the extent life reacts to matter. As there are many lives-countless-to every life, all other lives are objective. There is a life-the All-life-which is the primordial cause of all seemingly individualistic lives. That life, the sages say, is the Lord. The Lord also is the origin and cause of all matter. The Lord of life and matter is one. Who reacts to the Lord, reacts to every life and matter. He is the true wise man. He knits his consciousness with God-consciousness. The material integration of particles of matter and life brings into existence countless lives. Matter moves and life moves. In the human life, so with other things, matter moves, and life moves. They have a begining and an end. The motion of life in man is worth only the experiences he adds. Those experiences are left as the permanent asset of the life that moves to its end. This is so whether the experiences are had in wakeful moments or in sleep. Sleep is an experience even as dream is. Wakeful moments have experiences of many kinds on the mind of man. But these experiences are the experiences of a motion in life and matter.

In a dream, many things appear; years pass in a few seconds or minutes and the dream is lost. But the experiences left in the mind without the aid of the channels of the senses are as good as the experiences of life in the waking moments. In dreams events pass in dreadful fastness. In life they pass comparitively very very slow indeed. In both, all the objective events pass and pass away. Their results in experience on the mind alone remain. Hence it is true that life is a dream. It is a slow moving dream-equally so, that dream is a fast moving life. Only life is less transient and slow moving and dream moves in fatalistic hurry.

—*Thiruppugal Mani*

தாயற்றதோர் மகவேயெனத் தவிக்கின்றவெந் துயர்நீக்கியே
நோயற்றவாழ் வதுதந்துநுண் ணெறியிற்பயில் நலமீகுவாய்
வாயற்றபூச் சியன்ளன்றனை வருந்தவிட லதுநீதியோ
காயற்றமா முனிவோர்பணி கணநாயகா! கணநாயகா!!

No.1506
அசோகா
MILD SCENTED
ASOKA
நெ.1506

Coffee
Ours for Quality

RAW, ROAST OR GROUND

GANESH & CO, (MADRAS). LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

சுவர்ண மாளிகை

A. S. S. M. சோமசுந்தர செட்டியார் & Co.,

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூலவீதி - மதுரை

Tel:—"FAITH" Estd:—1924 Phone:—118

அரிய அருள் நூல்கள்

குகஸ்ரீ. பு. பா. இரசபதி அவர்களின் அருமையான
விரிவுரையுடன்

ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தர் அனுபூதி	1	0	0
,, 6 திருவகுப்புகள்	1	8	0
ஸ்ரீ பகழிக் கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்	2	0	0
ஸ்ரீ குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா	2	0	0
திருவெம்பாவை திருப்பாவை திருப்பள்ளியெழுச்சிகள்	0	6	0
ஸ்ரீ சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானவுலா	2	0	0
ஸ்ரீ ஔவையார் அருளிய விநாயகர் அகவல்	1	8	0
திருப்புகழ் மாலை (250 பாடல்கள் மட்டும்)	0	12	0
கந்தக் கதம்பம் (பாடல்கள்) பல பிள்ளைத் தமிழுடன்	1	0	0
கணபதி பக்தர்கள் (அச்சில்)			
முருகனடியார் ,,			

அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18
Edited & Published by S. Muthuswami, 54, Bunder St., Madras-1.